உ

ஓம்

பரப்பிரஹ்மணே நமஃ

ஆனந்தபோதினி

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"—திருவள்ளுவர்.

(ALL RIGHTS RESERVED.)

தொகுதி	சித்தார்த்தி௵ புரட்டாசி௴ ௧௨	பகுதி
5	1919௵ செப்டம்பர்௴ 17உ	3

கடவுள் வணக்கம்.

ஏக மானவுரு வான நீயருளி
　　ஞான னேகவுரு வாகியே
எந்த நாளகில கோடி சிர்ஷ்டி செய
　　லிசையு நாள்வரைய நாண்முத
லாக நாளது வரைக்கு முன்னடிமை
　　கூட வேசநந மானதோ
அநந்த முண்டுநல சநந மீதிதனு
　　ளறிய வேண்டுவன வறியலாம்
மோக மாதிதரு பாச மானதை
　　யறிந்து விட்டுனையு மெனையுமே
முழுது ணர்ந்து பர மானவின்பவெள
　　மூழ்க வேண்டுமிது வின்றியே
தேக மோநழுவி நானு மோநழுவின்
　　பின்னை யுய்யும்வகை யுள்ளதோ
தெரிவ தற்கரிய பிரம மேயமல
　　சிற்சு கோதய விலாசமே.

அழுக்கார்ந்த நெஞ்சுடை யேனுக்கை யாநின் னருள்வழங்கி
னிழுக்காகு மென்றெண்ணி யோவிரங் காதவியல்பு கண்டாய்
முழுக்காத லாகி விழிநீர் பெருக்கிய முத்தரெனுங்
குழுக்காண நின்று நடமாடுந் தில்லைக் கொழுஞ்சுடரே.

ஆலம்படைத்த விழியார்கண் மால்கொண் டவர்செயிந்த்ர
சாலம் படைத்துத் தளர்ந்தனையே யென்றுந் தண்ணருள்கூர்
கோலம் படைத்துக் கல்லாலடிக் கீழ்வைகுங் கோவுக்கன்பாங்
காலம் படைக்கத் தவம்படை யாதென்கொல் கன்னெஞ்சமே.

ஆனந்தபோதினி

சித்தார்த்தி௵ புரட்டாசி௴ ௧௨

வந்தவேலை என்ன?

(46-வது பக்கத்தொடர்ச்சி)

பிறப்பிறப்பாகிய பெருந்துக்க சாகரத்தினின்றும் முத்தியாங் கரைசேர்வதற்காகவே கருணாநிதியாகிய பரமன் நமக்கு இவ்வுத்தமப் பிறவியை யளித்திருக்கிறார் என்று நன்குணர வேண்டும். அதோடு முன் ஜனனத்தில் நாம் செய்தவினைகளின் பயனாகிய பிராரப்தபோகத்தை முழுதும் அனுபவித்தொழித்து, அதேகாலத்தில் இச்சன்மத்தில் புதிதாய்க் கர்மங்களைச் செய்யாம லிருந்தால்தான் மோக்ஷத்தை யடையலாம் என்று நன்குணரவேண்டும்.

பிராரப்தபோகத்தை யனுபவிப்பதற்கு நாம் செய்யவேண்டிய முயற்சி யாதொன்றுமில்லை. அந்த வினைப்பயன்கள் சடமாதலின் நாம் அனுபவிப்பதற்காக அவைகளும் தாமே வந்து அமையா. ஆகையால், கடவுளே அவற்றை நமக்குக் கூட்டி நாம் அனுபவிக்கும்படி செய்கிறார். பிராரப்தபோகத்தில் நன்மை தீமை இரண்டுமுண்டு. ஏனெனில் நாம் செய்யும் கர்மங்கள் நன்மை தீமையிரண்டுங் கலந்தவைகளாகவே யிருக்கின்றன. நாம்விதைத்த விதைக்குத்தக்க பலனையே யடைகிறோம். பிராரப்தப்பயனாய் நாம் அனுபவிக்கும் தீமைகளுக்கும், நமது அறியாமையாலும், ஆசையாலும், அகங்காரம், பொறாமை, துவேஷம் முதலிய துர்க் குணங்களாலும் நாம் செய்யும் குற்றச் செயல்களின் பயனாக நாம் அனுபவிக்கும் தீமைகளுக்கும் மிக்க பேதமுண்டு. இரண்டும் வெவ்வேறு.

சிலர் "புக்தி கன்மானு சாரணி" என்ற வாக்கியத்தைக்கொண்டு, நாம் நமது மனப் போக்கின்படிக்கெல்லாம் சென்று செய்யும் துர்க்காரியங்களின் பயனாய் அனுபவிக்கும் தீமைகளையெல்லாம் பிராரப்த வினைப்பயன்களென்று கருதுகிறார்கள். இது மிக்க துன்பத்தை விளைவிக்கத் தக்கப் பெருந்தவறாகும். பிராரப்த வினைப்போகம் நாம் ஒன்றும் செய்யாமலே யிருக்கையில் நமக்கு வலியவந்து சம்பவிப்பது. மற்றையவை நன்மை தீமைகளைப் பகுத்தறியும் அறி

வைக் கடவுள் நமக்குக் கொடுத்திருக்கையில் நாம் பிரியப்பட்டுக் கெட்ட காரியங்களைச் செய்வதன் பலன்களாய் வருபவை.

பிராரப்த வினைப்பயனை நோக்கி மதி செல்வதுண்டு. ஆனால் அது மனம் செல்லும் துஷ்ட வழிகளில் ஒரு கெட்டகாரியத்தைக் கருதிச்செல்லும் மதியாயிராது. அதற்கொரு திருட்டாந்தம் கூறுகிறோம்:—

கந்தனும் இன்னும் இரண்டுமூன்று சிநேகிதர்களும் ஒரு தோட்டத்திற்குள் சென்று காலைப்பாதைகளை யொழித்துக் கொண்டு சுத்திசெய்துகொள்ள அங்குள்ள ஒரு குட்டைக்குச் சென்றார்கள். அக் குட்டையி னருகில் கிலமான ஒரு குளம் உண்டு. கந்தன் "நான் அக்குளத்திற்குச் சென்று கால் அலம்பிக்கொண்டு வருகிறேன்" என்றான். அவன் நண்பர்கள் "வேண்டாம். அக்குளத்தின் படிகளனைத்தும் கிலமாய்க்கிடக்கின்றன. அது அபாயகரமான விடமென்றே யாவரும் அங்குச் செல்வதில்லை" என்றார்கள். கந்தன் அவர்கள் வார்த்தையை யசட்டை செய்து குளத்தில் இறங்கினான். அங்கு கொஞ்சகாலமாய்ச் சனங்கள் செல்வதில்லையானதினால் ஒரு படியின் கீழிருந்த ஒரு குழியில் ஒரு விட நாகம் வசித்துக்கொண்டிருந்தது. கந்தன் குளத்தில் இறங்கும் சமயம் அது தன் உடலை உள்ளே விட்டுக்கொண்டு வாலின் நுனியைமட்டும் வெளியில் வைத்துக்கொண் டிருந்தது. கந்தன் அதை யறியாது அதன் வால் நுனியை மிதித்துவிட, அரவம் நோயால் வெகுண்டு அவனைக்கடித்து விட்டது. என்ன சிகிச்சை செய்தும் பயனின்றிக் கந்தன் ஆறுமணி நேரத்திற்குள் மரணமடைந்தான்.

நேயர்களே! இது கட்டுக்கதையல்ல; சுமார் 15 வருடங்களுக்கு முன் நாம் பிரத்தியட்சமாய்க் கண்ட மிக்க கோரமான ஒரு சம்பவமாகும். அவனுக்கு அன்றுகாலை ஆறுமணிக்குத்தான் கலியாணம் நடந்தது. சடங்குகள்யாவும் நிறைவேறியபின் சுமார் ஒன்பது மணிக்கு இரண்டு மூன்று நண்பர்களுடன் தோட்டத்திற்குச் சென்ற அவனுக்கு இவ்வினைப்பயன் சம்பவித்தது.

இச்சம்பவத்தில் அவன் மனம் மற்றபேர் செல்லும் குட்டைக்கே தானும் செல்லலாமென்றிருப்பதை விட்டு, குளத்திற்குச் செல்வோமென்று தூண்டியது பிராரப்த வினைப்பயன்படிக்கே. இத்தகைய திருட்டாந்தத்திற்கே "புத்தி கன்மானு சாரணி" என்று கூறுவது. இவ்விஷயத்தில் அவனுக்குண்டான இச்சை எவ்வித கோரிக்கையையும் கருதியல்ல. பாபத்தையளிக்கும் எவ்விதக் கிரியைக் கருதியுமல்ல. இவ்வாறு சம்பவிப்பதே பிராரப்தவினைப்பயன்.

நன்மை தீமைகளைப் பகுத்தறியும் சக்தியை ஆண்டவன் நமக்களித்திருக்க, நாம் ஒன்றைக் கருதும்போதே அதைச் சிந்தித்து பாபகாரியங்களை நீக்கிவிடாமல், நம் விருப்பத்தின் வழியே சென்று

ஒரு காரியத்தை வேண்டுமென்றே செய்வதால் நேரிடும் தீமைக ளெல்லாம் நமது செயல்களேயாகும்.

நமது மனச்சாக்ஷிக்கு ஒவ்வாத எக்காரியத்தையும் நாமே வேண்டுமென்று செய்யாதிருக்கையில், நம்மால் தடுத்துக்கொள்ள முடியாதபடி சம்பவிக்கும் துன்பங்களெல்லாம் பிராரப்தவினைப் பயன்களே யாதலால் அவற்றைப்பொறுமையோடுநாம் அனுபவிக்க வேண்டும். உலகில் அத்தகைய துன்பத்திற்குக் காரணர்த்தமாய் வெளிக்கு யாரேனும் தோன்றினாலும், அவர்கள்தான் நமக்கு அத் துன்பத்தை யுண்டாக்கினார்கள் என்று ஞானவான்கள் ஒருபோ தும் கருத மாட்டார்கள். அதனால் அத்தகையோர்மேல் கோப மாவது வஞ்சமாவது கொள்ளமாட்டார்கள். ஏனெனில் "அவன ன்றியோரணவு மசையாது" என்ற உண்மையையும்,உலகிலுள்ளோ ரனைவரும் சூத்திரதாரி யாட்டுவித்தா லாடும் பதுமைபோல், ஆண் டவன் ஆட்டுவிக்க ஆடுகிறவர்களே யன்றி உண்மையில் அவர்கள் பிரியப்படி நமக்கு நன்மையையாவது தீமையையாவது செய்யும் சக்தியுடையவர்களல்ல வென்ற இரகசியத்தையும் ஞானவான்கள் அறிவார்கள்.

அவன் செய்விக்கச் செய்கிறவர்களா யிருக்கையில் அவர்கள் செய்கைக்குப் பாவபுண்ணியம் ஏன் உண்டாக வேண்டுமென்று ஒரு சந்தேகம் உதிக்கலாகும். அவர்கள் "அவன் ஆட்டுவிக்க நாம் ஆடுகிறோம். எல்லாம் அவன் செயல்" என்பதை யுணர்ந்து தற் செயலையும் தற்சுதந்தரத்தையும் நீக்கி நிற்பதைவிட்டு, எல்லாம் நம் செயலென்று கருதி 'நான், என்னுடையது' என்று அகமமதை கொண்டு நடப்பதால் பாப புண்ணியமாகிய கர்மங்கள் அவர்களைச் சேர்கின்றன.

மேற்கண்ட உண்மைகளை யுணர்ந்ததினாலேயே, பத்திரகிரியர சன் நிரபராதியாகிய பட்டினத்தடிகள்மேல் களவு குற்றம் சுமத்தி அவரைக் கழுவிலேற்றும்படி கட்டளையிட்டபோது அம்மகான்,

"என்செய லாவ தியாதொன்று மில்லை யினித்தெய்வமே
யுன்செய லேயென் றுணரப்பெற் றேனிந்த வூனெடுத்த
பின்செய்த தீவினை யாதொன்று மில்லை பிறப்பதற்கு
முன்செய்த தீவினையோ விங்கனே வந்து மூண்டதுவே"

என்று கூறிவிட்டதோடு அதற்குக் காரணமாய்த் தோன்றிய அரசன் மந்திரி முதலிய ஒருவர்மேலும் கோபம் கொள்ளாமல் அதற்குமாறாய் அவ்வரசனையே ஆட்கொண்டு அவரைப்பரமனரு ளுக்காளாக்கினார்.

இவ்வாறு பிராரப்தவினையை யனுபவித்துத் தொலைக்கவேண் டும். இனிப்பிறவியை யொழித்துக்கொள்ள என்ன செய்ய வேண் டும் என்பதைக் கூறுவாம்.

பிராரப்த வினைப்போகத்தை யனுபவித்துக்கொண் டிருக்கையி லேயே பாப புண்ணிய கர்மங்களைச் செய்யாது ஞானத்தையடைய முயற்சிசெய்ய வேண்டும். புண்ணிய கர்மபலனும் பிறவியை யுண் டாக்குவதேயாகும். ஞானத்தைப்பெறுவதெனின் அது நினைத்த தினமே முடிக்கிற காரியமல்ல. ஒருவன் உலகில் இருக்குமட்டும் ஜீவனார்த்தத்தின் பொருட்டேனும் தொழில்செய்தே தீரவேண்டும். ஆகையால் ஒரு கர்மமும் செய்யாமல் விட்டுவிடுவதென்பது எல் லோராலும் கூடுமான காரியமல்ல.

ஞானத்தையடைய வேண்டுமாயின் மனச்சேட்டையை யடக் கித் தன்னையறிய வேண்டும். அதன்றி ஞானம் ஒருபோதும் கிட் டாது. பூர்வ புண்ணியத்தால் விட்டகுறை யிருந்தவர்களே இச்சன் மத்தில் சுலபமாய்க் குருவருள்பெற்று மனதை யடக்கித் தன்னை யறிந்து, ஞானனுபவத்தை யடையக்கூடும். அவர்களுக்குத் தற்செய லற்றுப்போவதால் கர்மம் அவர்களைச் சாராது. மற்றையோர் செய்யவேண்டிய கர்மங்களைச் செய்துகொண்டே ஞானப்பியாச மும் செய்யவேண்டும். அதுவே தமது கட்டாயத் தொழிலாய்க் கருத வேண்டும்.

ஆனல் கர்மங்களைச் செய்வதில் அக்கர்மபலன் நம்மைச்சாரா வண்ணம் செய்யவேண்டும். நாம் மனதாலும், வாக்காலும், காயத் தாலும் பாப கருமங்களைச் செய்யாதபடி எச்சரிக்கையாயிருக்க வேண்டும். ஏனெனில் நாம் சிந்தனையாலும், வாய்ச்சொல்லாலும், செய்கையாலும், இன்னும் பார்வையாலும் செவியால் கேட்பதா லுங்கூட பாபபுண்ணியங்களைச் செய்கிறோம். அதனற்றான் பட் டினத்தடிகள்,

"சொல்லால் வருங்குற்றஞ் சிந்தனை யால்வருந் தோடஞ்செய்த
பொல்லா தவினை பார்வையிற் பாவங்கள் புண்ணியநூ
லல்லாத கேள்வியைக் கேட்டிடுந் தீங்குக ளாயவுமற்
றெல்லாப் பிழையும் பொறுத்தருள் வாய்கச்சி யேகம்பனே"
என்று அருளியிருக்கிறார்.

ஆகையாலிந்த எச்சரிக்கையோ டிருந்துகொண்டே மற்றபடி செய்யவேண்டிய அவசியமான கருமங்களைச் சுயநலங்கருதாமல் செய்யவேண்டும். அதற்கே நிஷ்காம கருமம் என்று பெயர். எக் கருமத்தையும் ஈசுரார்ப்பணமாய்ச் செய்யவேண்டு மென்பதும் அதுவே. ஸ்ரீ கிருஷ்ணபகவான் கீதையில் கர்மயோகம் என்று உப தேசிப்பதும் அதுவே. அவ்வாறு செய்வதால் எச்செய்கையும் இச்சையின்றி சுயநலங் கருதாத செய்கையாகிறது. அதனல் அக் கர்மபலன் கர்மத்தைச் செய்பவனைச் சேர்வதில்லை.

இச்சையற்று கர்மங்களைச் செய்வதால் சித்தசுத்தி யுண்டா கிறது. அதனல் மனம் சுலபமா யடங்கிவிடும். இச்சையே மனதின்

சொரூபமானதால் மனம் தொழிலற்று விடுகிறது. இச்சையற்றால் மனமாகிய காற்றாடியின் சூத்திரக்கயிறு அற்றுவிட மனம் விழுந்துவிடும். ஆகையால் கர்மங்களை ஈசுரார்ப்பணமாய்ச் செய்துகொண்டே மேற்குறித்தபடி மோக்ஷப் பிரயத்தனமாகிய ஞானப்பியாசத்தைச் செய்யவேண்டுமென்று ஆன்றோர்களாகிய மகான்கள் கூறியிருப்பதைக் கிளிப்பிள்ளைபோல் நாமும் கூறிமுடித்தோம். நிஷ்காம கருமத்தையும் ஞானப்பியாசத்தையும் பற்றி ஈண்டு விவரமாய்க் கூறப்புகின் மிகப் பெருகுமென்றஞ்சி இதோடு முடிக்கிறோம். கருணாநிதியாகிய பரம்பொருள் நாம் வந்தவேலையை மறந்துவிடாமற்செய்து முடித்துக் கொள்ளுமாறு நல்லறிவளித்து அருள்புரிய வேண்டுமாய்ப் பிரார்த்திக்கிறோம். ஓம்தத்ஸத்.

பத்திரிகாசிரியர்.

அமர்நீதிநாயனார் சரித்திரம்

சோழநாட்டில் பழையாறை என்னும் ஊரில் வைசியர் குலத்தி லவதரித்த அமர்நீதி நாயனார் என்பவர் ஒருவரிருந்தார். அவர் திருநல்லூர் சிவஸ்தலத்தில் மகோற்சவ தரிசனஞ்செய்ய வரும் சிவனடியார்கள் அமுது செய்யும் பொருட்டு ஒரு திருமடம் கட்டுவித்து, தாம் தம்முடைய சுற்றத்தார்களுடன் அவ்விடத்திற் போய்ச் சேர்ந்து தரிசனத்திற்கு வரும் அடியார்கட்கு அமுதுசெய்வித்து, அவர்களுக்கு வேண்டியகந்தை, கோவணம் முதலியவைகளைக் கொடுத்து மனமகிழந் திருக்கும்நாளில், ஓர் நாள் பரமசிவன் பிராம்மண பிரமச்சாரி வடிவுகொண்டு இரண்டு கௌபீனங்களும் விபூதிப்பையும் கட்டியிருக்கும் ஓர் தண்டைக் கையில் பிடித்துக்கொண்டு அத்திருமடத்திற்கு வந்தார். அவர் வரவைக்கண்ட அமர்நீதிநாயனார் மிக்க மகிழ்ச்சியுடன் எதிர்கொண்டு வணங்கி சுவாமி தேவரீர் இங்கு அமுது செய்தருளவேண்டுமென்று பிரார்த்திக்க, அதற்கவர் உடன்பட்டு, "நாம் காவேரியில் ஸ்நானம் செய்துவருகிறோம், வருங்கால் மழைவரினும் தரித்துக்கொள்ளும் பொருட்டு இந்த உலர்ந்த கௌபீனத்தைப் பத்திரமாய் வைத்திருந்துதாரும்" என்று சொல்லி தண்டில் கட்டப்பட்டிருந்த இரண்டு கௌபீனங்களில் ஒன்றை அவிழ்த்துக் கொடுத்துவிட்டு ஸ்நானத்திற்குச் சென்றார். சென்ற பரமசிவனாகிய பிரம்மச்சாரி நாயனாரிடம் கொடுத்த கௌபீனம் வைத்தவிடத்தி னின்றும் நீங்கும்படிக்கும் மழைபெய்யும்படிக்கும் செய்து தாமும் ஸ்நானம்செய்து மழையில்நனைந்து கொண்டு திருமடத்தையடைந்து நாயனாரைநோக்கி "நாம்தரித்துள்ள கௌபீனத்தின் ஈரம் மாற்றவேண்டி யிருப்பதால் உம்மிடம்தந்த கௌபீனத்தைத் தாரும்" என்றார். நாயனார் உள்ளேபோய் வைத்தவிடத்தில் கௌபீனத்தைக் காணாது மடம்முழுவதும் தேடியுங் காணாதவராகித் திகைத்து, மிக்கதுயர்கொண்டு வேறோர் கௌபீனத்துடன் பிர்மச்சாரிமுன் சென்று, "சுவாமி, தேவரீர் தந்த கௌபீனத்தை வைத்த விடத்திலும் மற்ற மடம்முழுதும் தேடியுங் காண்கிலேன்; ஆதலால் வேறொரு புதிய கௌபீனம் கொண்டுவந்தேன்; அது கிழிக்கப்பட்ட கோவணமன்று, நெய்யப்பட்ட கோவணமே. தேவரீர் நனைந்த கோவணத்தை மாற்றி அடியேன் தரும் கோவணத்தை யணிந்து என் குற்றத்தை க்ஷமித்தருளும் சுவாமி" என்று வணங்க, பிரமச்சாரியர்

மிக்க கோபங்கொண்டு "இப்போது கொஞ்சநேரத்திற்கு முன் உம்மிடம் கொடுத்த கௌபீனம் காணோமென்று வேறொரு கௌபீனத்தை எற்றுக் கொள்ளும்படி சொல்வது மிகவும் நன்றாயிருக்கிறது. சிவனடியார்களுக்கு நல்ல கௌபீனம் தருவேனென்று நீர் ஊரில் பிரசித்தம் செய்தது என்னுடைய கௌபீனத்தைக் கவர்வதற்கோ?" என, அமர்நீதிநாயனார் பயந்து முகம்வாடி நடுநடுங்கி "சுவாமி அடியேன் இக்குற்றத்தை அறிந்துசெய்தேனல்லேன். தேவரீருக்கு இக்கோவண மன்றி வெகு பொன்களையும் பட்டாடைகளையும் இரத்தினங் களையும் தருகிறேன் எற்றுக் கொள்ளும்" என்றார்.

அதற்கு பிரமச்சாரி சற்று கோபந்தணிந்தவர் போல "பொன்களும் பட்டாடைகளும் இரத்தினங்களும் எனக்கேன்? நாம் தரிப்பதற்குபயோகமான கௌபீனத்திற்கு ஒத்த நிறையுள்ள கௌபீனம் தந்தாற் போதும்" என்றார். அமர்நீதிநாயனார் மனமகிழ்ந்து ஒரு தராசு கொண்டுவந்து நாட்டி அதில் பிரமச்சாரியருடைய மற்றொரு கௌபீனத்தை ஒரு தட்டிலே வைத்து அமர்நீதி நாயனாரிடமிருந்த கையினால் நெய்யப்பட்ட கௌபீனத்தை மற்ற தட்டிலே வைத்தார். அது ஒத்த நிறையில்லாமல் மேலெழுந்ததைக்கண்டு அடியார்களுக்குக் கொடுக்கும்படி தாம் வைத்திருந்த கோவணங்களெல்லாவற்றையும் கொண்டுவந்து ஒவ்வொன்றாகத் தட்டிலிட இட, பின்னும் அத்தட்டு மேலுயர, அதைப் பார்த் தாச்சரியமும் அச்சமுங் கொண்டு, நாயனார் தம்மிடமுள்ள பல வஸ்திரங்களையும் பட்டுகளையும் கொணர்ந்து மேலும் மேலும் வைக்க, பின்னும் தட்டு உயர்ந்துவருவதைக் கண்டு அனேகம் வஸ்திர மூட்டைகளையும் நூல் கட்டுகளையும் கொண்டுவந்து தட்டிலிட்டும் அத்தட்டு மேலும் கௌபீனத்தட்டு கீழுமாகநிற்பதை அமர்நீதிநாயனார் கண்டு பயந்து, "சுவாமி, என்னிடமிருந்த கௌபீனங்களும், வஸ்திரங்கள்., நூற்கட்டுகள் எல்லாம் தட்டிலிட்டும் அத்தட்டு உயர்கிறது. ஆதலால் என்னுடைய மற்ற திரவியங்களையும் தட்டிலிட அனுமதிதரவேண்டும்" என்று வேண்டினார். அதற்கு பிரமச்சாரியர் எப்படியாவது நம்முடைய கோவணத்திற்குச் சரியிடை தரவேண்டுமென்றார். அமர்நீதிநாயனார் தம்மிடமுள்ள நவரத்தினங்கள் பொன் வெள்ளி முதலிய உலோகங்களையும் தட்டிலிட்டும் தட்டுமுன்போலவே மேலெழுவதைக் கண்டு பிரமச்சாரியாரை வணங்கி "சுவாமி நானும் என் மனைவிபுத்திரன் ஆகிய நாங்கள் தவிர மற்ற யாவும் தட்டி லிட்டும் தட்டு சரியாகவில்லை. தேவரீருக்குப் பிரியமாகில் நாங்களும் தட்டிலேற அனுமதிதரவேண்டும்" என, பிரம்மச் சாரியாரும் உடன்பட்டார். அது கண்டு நாயனார் மிக்க மகிழ்ச்சிகொண்டு தாம் தம்முடைய மனைவி, புத்திரர் இருவரோடும் தராசை வலம்வந்து "நாம் சிவனடியார்க்குச் செய்யும் திருத்தொண்டில் தவறாமல் நடந்தது உண்மையாகில் எங்கள் மூவரோடு இத்தட்டு மற்ற தட்டுக்கு ஒத்து நிற்கக்கடவது" என்று பிரதிக்கினை செய்து, திருநல்லூரில் வீற்றிருக்கும் பரமசிவனைவணங்கி ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தை ஓதிக்கொண்டு மனமகிழ்ச்சியுடன் தட்டிலேறினர். எறினவுடனே துலாக்கோலின் இருதட்டுகளும் ஒத்துநின்றன. இவ்வற்புதத்தைக் கண்டவர்களெல்லாரும் அமர் நீதிநாயனாரைவணங்கி ஸ்தோத்திரஞ்செய்தார்கள். உடனே பரமசிவன் தாம் கொண்ட பிர்மச்சரிய வடிவுநீங்கி ஆகாயத்தில் ரிஷபவாகனரூடராய்த் தோன்றி, அதனைத் தரிசித்து அத்தட்டில்தானே நின்றுகொண்டு ஸ்தோத்திரம் செய்கின்ற அமர்நீதி நாயனாரையும் அவர் மனைவி புத்திரரையும் கடாக்ஷித்து, நீங்கள் மூவரும் நம்முடைய அருளைப்பெற்று

நம் சந்நிதானத்தில் நம்மை வணங்கிக்கொண் டிருங்களென்று அருளிச் செய்து மறைந்தருளினர். அமர்நீதி நாயனர் தாரபுத்திரர்களுடன் சிவபெருமான் திருவருளினல் அந்தத் தராசுதானே தேவவிமானமாகி சிவ லோகத்தை யடைந்தார்.

அன்பே உருவான பரம்பொருளை யடைய விரும்புவோர்க்கு அவரிடம் பூரணபக்தி வைப்பதே சிறந்த மார்க்கமாகும். பூரணபக்தியிருந்தால் ஞானத்தையடையும் மார்க்கம் ஒரு நொடியில் ஆண்டவன் கருணநோக்கத் தால் கிட்டிவிடும்.

(இஃது பெரியபுராணத்தி லிருந்து ஆனந்தபோதினி நண்பர்களுக்காக சுருக்கமாய் வரையப்பட்டது.

S. துரைசாமி பிள்ளை, கர்ணம், தண்டரை.

விதியும் மதியும்

பத்திரிகாசிரியரவர்கட்கு:—

விதியையும் மதியையும் பற்றி ஓர் பால்யக்கூட்டத்தில் தர்க்கம் நடந்தது. அவ்விடத்தில் நானும் இருக்க நேர்ந்ததால் கீழ்க்கண்ட விடையளித்தேன். அதை என் சிநேகிதர்கள் ஆனந்தனுக்கு எழுதும்படி கேட்டுக் கொண்டார்கள். ஷை யார்கள் விருப்பத்தை பூர்த்திசெய்ய விரும்புகிறேன்:-

விதி பெரிதா? அல்லது மதி பெரிதா? என்னும் ஐயவினு சற்று பாண்டித்ய முடையோருக்கு எளிதில் விளங்கினும் மந்தாதிகாரிகளுக்குப் பெரிய வாதமாய் நடைபெற்றுக் கடைசியில் முடிவின்றித் தீராவழக்கென்று கருதப்படுகிறது.

ஷை சங்கைவினவிற்கு வேறு பரிகாரங்கள் பல விருப்பினும் எல்லோரும் எளிதிலறிந்து கொள்ளும்படி ஒரு திருஷ்டாந்த மூலமாய் ஷைவினவிற்கு விடையைச் செப்புகிறேன்.

திருஷ்டாந்தம்.

அண்டத்தில் உள்ளது பிண்டத்தில் என்றபடி அண்டத்தில் விதியாகிய சூரியனுடைய பிரகாசம் மதி யாகிய சந்திரனுடைய எந்தப்பாகத்தில் மட்டும் வியாபிக்கிறதோ அந்தப் பாகமட்டுந்தான் பிரகாசிக்குமேயன்றி பூரு மதியும் பிரகாசியாது என்பதும் வெளிப்படை.

தாஷ்டாந்தம்.

பிண்டத்தில் பிராரத்த வினையாகிய விதி வலிக்குத் தக்கபடிதான் புத்தியாகிய மதி பிரயோசனப்படுகிறது.

முன்னேர் வாக்கு.

இவ்வையம் நீங்கும் பொருட்டே விதியை அனுசரிக்கும் மதி என்றும், ஆனவரும் பின்னே, மணியோசை வரு முன்னே என்றும். கேடுவரும் பின்னே மதிகெட்டுவரும் முன்னே என்றும் பழமொழி உண்டாயிருக்கின்றன. இவற்றை நோக்குங்கால் விதி வழிகாட்டியாயும் மதி வழி நடப்போனகவும் பொருள்படும்.

மு. துரைச்சாமி பிள்ளை,
(கர்ணம்) வெள்ளியங்குன்றம் கிராமம்.

குறிப்பு :—நேயர்களே! மேற்கண்ட விஷயத்தின் சம்பந்தமாக, பல பேருக்குத் தவறான அபிப்பிராயம் உண்டாக லாகாது என்பதைக் கருதி, நாம் சில வார்த்தைகள் கூறவேண்டுவது அவசியமாயிற்று.

நமது நண்பர் மேற்கண்ட வியாசத்தில் "விதிபெரிதா? மதிபெரிதா?" என்ற கேள்வியை யெடுத்துக்கொண்டதற் கொப்ப பின்பாகத்தில் விதியே மதிக்கு வழிகாட்டி என்று முடித்துவிட் டிருக்கிறார். இதனால் மனிதனுடைய மனம் எவ்வழி செல்லினும் அது பிராரப்த வினைப்பயன் படிக்கே செல்கின்றதென் றாகிறது. அப்போது ஜீவன் தானாய்ச் செய்வது ஒன்றுமில்லையென்றே ஏற்படுகிறது. இந்த அபிப்பிராயம் கொண்டால் மிக்க சந்தேக விபரீதங்களுக்கு இடமுண்டாகு மென்றஞ்சுகிறோம். மேலும் இது ஆன்றோர் வாக்குக்கும் அனுபவத்திற்கும் மாறாயிருக்கிறது.

அவ்வாறு ஒருவன் தன் சுதந்தரமாய் ஒன்றையும் செய்யாமல் பூர்வ வினைப்பயனால் தூண்டப்பட்டே எல்லாக் கருமங்களையும் செய்வதாயின், இவன் செய்யும் கருமங்களுக்காக மறுபடி யிவனுக்குத் தண்டனையளிப்பது அடியோடு அக்கிரமமாகும். இவன் மேற்கண்டவாறு கர்மங்களைச் செய்வதாயின் மறுபடி ஜனன முண்டாகும் வண்ணம் சஞ்சிதவினை இவனிடம் சேர வழியில்லை. இச்சன்மத்தில் இவன் அப்படி கருமங்களைச் செய்வதாயின் கடந்த ஜனனத்திலும் அப்படியே செய்திருக்க வேண்டும். அப்படிச் செய்திருந்தால் இச்சனனத்தை யுண்டாக்க இவனுக்குச்சஞ்சிதவினை யிருந்திருக்கக் காரணமே யில்லை யாதலால், இச்சனனம் வரவே வழியில்லை.

ஆகையால் " புத்தி கன்மானுசாரணி" என்பதற்கு இவ்வாறு விபரீத அர்த்தம் கொள்வது தவறு. ஆயினும் புத்தி வினைவழிச்செல்வதில்லையென்று கருதிவிடலாகாது. ஆனால் அப்படிச் செல்லும் மனம் ஒரு கெட்டகுணத்தால் தூண்டப்பட்டாவது, தீவினையை யுண்டாக்கத்தக்க யாதாமொரு காரியத்தைக் கருதியாவது செல்வதாயிராது. அதற்குத் திருட்டாந்தம் இச் சஞ்சிகையின் " வந்தவேலை யென்ன ?" என்ற வியாசத்தில் (82-ம் பக்கம் தொடங்கி) கூறியிருக்கிறோம். அதில் கந்தன் என்பவன் தன் சிநேகர் செல்லும் குட்டைக்குச் செல்லாது குளத்திற்குச் சென்றது ஒரு காரியத்தைக் கருதியல்ல. அப்படியவன் அதைப்பற்றி சிந்தித்திருந்தால் " நமது நண்பர்கள் அக்குளத்தின் படிகள் கிலமாய்க் கிடக்கின்றன என்று கூறுகிறார்களே, நாம் அங்குசென்றால் ஒருசமயம் இடறிவிழ நேர்ந்தாலும் நேரிடும்" என்று சிந்தித்து அங்கு செல்வதை விட்டிருக்கலாம். வினைப்பயன் இழுப்பதால் ஒரு யோசனைக்கு மிடந்தராது, மனதிற்கு ஒரு காரணமுமின்றியே பிடிவாதமான நாட்டத்தை மட்டும் தந்தது.

அப்படிக்கின்றி கோபம், இச்சை, குரோதம், பொறாமை முதலிய துர்க்குணங்களில் ஒன்றால் தூண்டப்பட்டு நாம் செய்யும் செயல்கள் எல்லாம் சீவச்செயல்களே யாகும். நாம் பகுத்தறிவால் சிந்தித்துப் பார்த்து அத்தகைய காரியங்களில் பிரவேசியாது விலகிவிடக் கூடும். பிராரப்த வினைப்பயனையோ விலக்கமுடியாது. அதை யனுபவித்தே தீரவேண்டும்.

இனி நமது நண்பர் எடுத்துக்கொண்ட " விதிபெரிதா மதிபெரிதா?" என்ற கேள்விக்கு விடை இன்னதுதான் பெரிதென்று ஒருபட்சமாய்க் கூறக்கூடியதல்ல. பூர்வ வினைப்பயனைத்தடுக்க ஒருவராலும் முடியாதென்று திருட்டாந்தங்களோடு பல நூல்கள் மொழிகின்றன.

ஆனால் யாவும் ஈசன்செயலே யென்று தெளிந்து தற்செயலற்று தன்னிலையில் நிற்போர் தவிர,மற்றபேர்"எல்லாம் வினையின்படி யாவும் நடக்கும், நம்மாலாவது ஒன்றுமில்லை" என்று மசானவைராக்கியம்போல் வாயால்மட்டும் கூறிக்கொண்டு முயற்சி யின்றியிருக்கலாகாது என்றும், விதி வலியுடையதெனினும் மதியைக்கொண்டுபூர்வ வினைப்பயனாகிய விதியின் கொடுமை நம்மேல் பூரணமாய்த் தாக்காதபடி செய்து கொள்ளலாமென்றும் அந்நூல்களே கூறுகின்றன. இதனால் "மதியால் விதியை வெல்லலாம்" என்ற ஒரு வாக்கியமும் உலகில் வழங்குகிறது.

திருட்டாந்தமாய் மேற்கூறியபடி தற்செயலற்றுத்தன்னிலையில் இருக்கும் ஞானிகளும் பிராரப்தவினைப் பயனை யனுபவித்தே தீர்கிறார்கள். ஆனால் அத்தீவினையை யனுபவிக்கையில் அவர்கள் நம்போல் வருந்துவதில்லை. பெரும்பாலும் அதன் உணர்ச்சியே யவர்களுக்குக் கிடையாதென்றும், அந்த வினைகளை யவர்கள் நல்ல நித்திரையில் எறும்புகடித்தால் நாம் எம்மட்டில் அதை யுணர்கிறோமோ, அதுபோல் அனுபவிக்கிறார்களென்றும் கூறப்படுகிறது. இந்த "விதி மதி" என்ற விஷயத்தைப்பற்றி 4-ம் வருட ஆனந்தபோதினியின் 367-வது பக்கத்தில் தொடங்கும் வியாசம் கவனிக்கத் தக்கது. **பத்திரிகாசிரியர்.**

கைவல்ய நவநீத வசனம்

(73-ம் பக்கத்தொடர்ச்சி)

(இதன் பொருள்)

ஐந்துபூதமும் பத்தாக்கி=இந்தச் சூக்கும பூதங்கள் ஐந்தையும், (ஒவ்வொன்றையும் இரண்டு இரண்டு சமபாகங்களாய்ச் செய்வதால்) பத்தாகச்செய்து,

அவைபாதி நந்நான்காக்கி=அந்த ஐந்துபூதங்களின் ஒருபாதியை (யெடுத்து அவற்றிலுள்ள ஒவ்வொரு அரைப்பாகத்தையும்) நான்கு நான்காகக் செய்து,

நந்து தம்பாதி விட்டு நான்கொடு நான்கும் கூட்ட=ஒவ்வொரு பூதத்தின் நான்கு பங்குகளையும் எடுத்து, (முன் இருக்கும் ஐந்து அரைப்பாகங்களில்) தன் இனமாகிய அரைப்பாகத்தை விட்டு மீதியுள்ள மற்ற நான்கு அரைப்பாகங்களிலும் ஒவ்வொன்று சேர்க்கவே, தூலபூதம் வந்தன=பஞ்சீகரித்த ஸ்தூல பூதங்களுண்டாயின.

மகாபூதம் இவற்றினின்றும் = மகாபூதங்களாகிய இத்தூல பூதங்களினின்றும்,

நான்காம்தூல தநு அண்டம் புவனம் போகம்தந்தன=ஸ்தூலதேகம், பிரமாண்டம், பலபுவனங்கள், போகயோக்கியமான பொருள்கள் ஆகிய நான்கும் உண்டாயின.

இப்பஞ்சீகரண முறையைப்பற்றியே பிரம்ம கீதையில்.—

"தன்மாத் திரைகளைந் தினையு மோரோன் றிரண்டாய்ப் பகுத்தொன்றை
நந்நா லாக்கித் தன்பாதி யொழிந்த நாலி னுடன்கூட்டி
யின்னே யல்லா தவைநான்கி னியல்பிற் கூட்ட வானதி
பின்னே தூல பூதமெனப் பிறக்கு மெனவே பெயர்த் துரைத்தான்."

என்று கூறப்பட்டிருக்கிறது.

இதையொருவாறு தெளிவாய்க் கூறுவாம்:—

"ஐந்து பூதமும் பத்தாக்கி" என்றபடி ஐந்தையும் - ஒவ்வொன்றை இரண்டிரண்டாக்குவதினல், பத்தாக்கின், அப்பூதங்கள் கீழ்பகுக்கப்பட்ட படி நிற்கும்.

ஆகாயம் $\frac{1}{2}$	வாயு $\frac{1}{2}$	தேயு $\frac{1}{2}$	அப்பு $\frac{1}{2}$	பிருதிவி $\frac{1}{2}$
ஆகாயம் $\frac{1}{2}$	வாயு $\frac{1}{2}$	தேயு $\frac{1}{2}$	அப்பு $\frac{1}{2}$	பிருதிவி $\frac{1}{2}$

"பின்பு அவைபாதி நந்நான் காக்கி" என்றபடி அவற்றில் ஒரு தொகுதியிலுள்ள அரைப்பாகங்களை நான்கு நான்காகச்செய்தால், அதாவது ஒவ்வொரு பூதத்தின் ஒவ்வொரு அரைப்பாகத்தையும் நான்கு நான்கு பாகங்களாக்கினல், ஒவ்வொரு பூதத்தின் ஒரு அரைப்பாகம் தனி அரைப்பாகமாகவும், மற்ருெரு அரைப்பாகம் 4 அரைக்கால் பாகங்களாகவும் பிரிந்து நிற்கும். அப்போது பூதங்கள் கீழ்க்கண்ட நிலைப்படி பகுக்கப்பட்டிருக்கும்.

ஆகாயம்	$\frac{1}{2}$	வாயு	$\frac{1}{2}$	தேயு	$\frac{1}{2}$	அப்பு	$\frac{1}{2}$	பிருதிவி	$\frac{1}{2}$
ஆகாயம்	$\frac{1}{8}$	வாயு	$\frac{1}{8}$	தேயு	$\frac{1}{8}$	அப்பு	$\frac{1}{8}$	பிருதிவி	$\frac{1}{8}$
ஆகாயம்	$\frac{1}{8}$	வாயு	$\frac{1}{8}$	தேயு	$\frac{1}{8}$	அப்பு	$\frac{1}{8}$	பிருதிவி	$\frac{1}{8}$
ஆகாயம்	$\frac{1}{8}$	வாயு	$\frac{1}{8}$	தேயு	$\frac{1}{8}$	அப்பு	$\frac{1}{8}$	பிருதிவி	$\frac{1}{8}$
ஆகாயம்	$\frac{1}{8}$	வாயு	$\frac{1}{8}$	தேயு	$\frac{1}{8}$	அப்பு	$\frac{1}{8}$	பிருதிவி	$\frac{1}{8}$

பிறகு "நந்து தன் பாதிவிட்டு நான்கொடு நான்குங்கூட்ட" என்றபடி ஒவ்வொரு பூதத்தின் நான்கு பாகங்களையுமெடுத்து, தன் இனமாகிய அரைப்பாகத்தை விட்டுவிட்டு, மற்ற 4 பூதங்களின் அரைப்பாகங்களில் ஒன்றுக்கொன்ருகச் சேர்த்துவிட வேண்டும். எவ்வாறெனின், மேல்காட்டிய பூதங்களின் நிலைமைப்படி ஐந்து பூதங்களின் 5 அரைப்பாகங்கள் தனித்தனி வெவ்வேரு யிருக்கின்றன. இவையன்றி ஒவ்வொரு பூதத்தின் 4 அரைக்கால் பாகங்கள் வேறு இருக்கின்றன. அவற்றில் முதலாவதாக ஆகாயத்தின் 4 அரைக்கால் பாகங்களையும் எடுத்து மேல்கண்டபடி $\frac{1}{2}$ ப்பாகங்களில் பங்கிடுவோம். இப்போது $\frac{1}{2}$ப்பாகங்கள் 5 இருக்க, 1/8 பாகங்களோ நான்கேயிருக்கின்றன. நாம் எடுத்துக்கொண்டது ஆகாயத்தின் 4 அரைக்கால் பாகங்கள். இந்த நான்கையும், ஆகாயத்தின் $\frac{1}{2}$ ப்பாகமாகிய தன் அம்சத்திற்கு பங்குசேர்க்காமல் விட்டுவிட்டு, மீதியிருக்கும் வாயு-தேயு அப்பு-பிருதிவி இவற்றின் $\frac{1}{2}$ பாகங்களில் ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு 1/8 பங்காக நான்கு அரைக்கால் பங்குகளுக்கும் பங்கிட்டுவிடவேண்டும். ஆகாயத்தின் 4 அரைக்கால் பாகங்களை மட்டும் அவ்வாறு பங்கிட்டபோது பாகம் கீழ்க்கண்டவிதமாய்ச் சேரும்.

ஆகாயம்	$\frac{1}{2}$	வாயு	$\frac{1}{2}$	தேயு	$\frac{1}{2}$	அப்பு	$\frac{1}{2}$	பிருதிவி	$\frac{1}{2}$
		ஆகா	$\frac{1}{8}$	ஆகா	$\frac{1}{8}$	ஆகா	$\frac{1}{8}$	ஆகா	$\frac{1}{8}$

இவ்வாறே வாயுவின் நான்கு அரைக்கால் பாகங்களையும் பங்கிடும்போது, அதன் அம்சமாகிய அரைப் பாகத்திற்கு பங்குசேர்க்காமல், ஆகாயம் $\frac{1}{2}$, தேயு $\frac{1}{2}$, அப்பு $\frac{1}{2}$, பிருதிவி $\frac{1}{2}$, இவைகளோடு மட்டும் ஒவ்வொரு அரைக்கால் பாகத்தைச் சேர்க்கவேண்டும். இவ்வாறே தேயு, அப்பு, பிருதிவி இவற்றின் அரைக்கால் பாகங்களையும் அதனதன் அம்சமாகிய அரைப் பாகத்தை விட்டு மற்ற நான்கு அரைப் பாகங்களோடும் சேர்க்கவேண்டும்.

அப்படிச் சேர்த்தபின் பார்த்தால் ஒவ்வொரு முழுப்பூதத்திலும் அதன் பாகம் அரையாகவும் மற்ற நான்கு பூதங்களும் நான்கு அரைக்கால் பாகங்களாகவும் இருக்கும். அவ்வாறு பஞ்சீகரிக்கப்பட்ட ஸ்தூல பூதங்களின் நிலை கீழ்க்கண்டவாறிருக்கும்:—

ஆகாயம்	$\frac{1}{2}$	வாயு	$\frac{1}{2}$	தேயு	$\frac{1}{2}$	அப்பு	$\frac{1}{2}$	பிருதிவி	$\frac{1}{2}$
வாயு	$\frac{1}{8}$	ஆகா	$\frac{1}{8}$	ஆகா	$\frac{1}{8}$	ஆகா	$\frac{1}{8}$	ஆகா	$\frac{1}{8}$
தேயு	$\frac{1}{8}$	தேயு	$\frac{1}{8}$	வாயு	$\frac{1}{8}$	வாயு	$\frac{1}{8}$	வாயு	$\frac{1}{8}$
அப்பு	$\frac{1}{8}$	அப்பு	$\frac{1}{8}$	அப்பு	$\frac{1}{8}$	தேயு	$\frac{1}{8}$	தேயு	$\frac{1}{8}$
பிருதிவி	$\frac{1}{8}$	பிரு	$\frac{1}{8}$	பிரு	$\frac{1}{8}$	பிரு	$\frac{1}{8}$	அப்பு	$\frac{1}{8}$
ஆகாயம்	1	வாயு	1	தேயு	1	அப்பு	1	பிருதிவி	1

இவ்வாறு ஸ்தூல பூதங்கள் ஒவ்வொன்றிலும் மற்ற நான்கு பூதங்களும் சம்பந்தப்பட் டிருப்பதால் அவற்றின் அன்னியோன்னிய சம்பந்தத்தால் ஒவ்வொரு பூதத்தி லிருந்தும் ஐந்து ஐந்து தத்துவங்களாக இந்த ஐந்து பூதங்களிலுமிருந்து 25 தத்துவங்க ளுண்டாயின. இவற்றினின்றே ஸ்தூலதேகம், அண்டம், புவனங்கள், சீவன்களுடைய போகத்திற்கு வேண்டிய பொருள்கள் முதலிய யாவும் உற்பத்தியாயின.

இவற்றினின்றே சீவன்களுக்கு வேண்டிய நால்வகை யோனி எழுவகைத் தோற்றமாயுள்ள எல்லாத்தூல உருவங்களும் உண்டாயின. இவற்றில் நால்வகை யோனியென்பது சீவன்களுக்குரிய தேகங்கள் உற்பத்தியாகும் 4 வகை ஸ்தலங்களாம்.

அவை—(1) சராயுஜம். (2) அண்டஜம். (3) ஸ்வேதஜம். (4) உத்பிஜம் என நான்காம்.

(1) **சராயுஜம்**:—பைக்குள் கட்டுப்பட்டு ஜனிப்பதாம் - மனிதர்கள் மிருகங்கள்போல்.

(2) அண்டஜம்:—முட்டையி லிருந்து உற்பத்தியாவது. பட்சிகள், பெரும்பாலான மச்சங்கள் இவை போன்றவை.

(3) ஸ்வேதஜம்:—வியர்வையி னின்றும் உற்பத்தியாவது. பேன் முதலிய போன்றன.

(4) உத்பிஜம்:—வித்தினின்றும் உண்டாதல். மரம், செடி முதலியன போன்றவை.

எழுவகைத்தோற்றம் என்பது பிறவியிலுள்ள ஏழு வகைகளாம். அவை:

(1) தேவர். (2) மனிதர். (3) விலங்குகள். (4) பறவைகள். (5) ஊர்ந்து (நகர்ந்து) செல்லும் ஜெந்துக்கள். அவை புழு, அரவம், நத்தை முதலியவை. (6) நீர் வாழ்வன. (ஜலத்தில் வசிக்கும் தவளை, மீன் முதலிய ஜெந்துக்கள்) (7) தாவரங்கள் (மரம் செடி முதலிய இடம் விட்டுப் பெயராதவைகள்).

இவைகளே 1. உத்தமஜாதி, 2. மத்திமஜாதி, 3. அதமஜாதி என மூன்று வகையாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன.

இவற்றுள்:—

1. உத்தமஜாதி:—இகலோக புத்தி, பரலோக புத்தி இரண்டையுமுடைய பகுத்தறிவுள்ள மானிட ஜன்மங்களே.

2. மத்திமஜாதி:—பரலோக புத்தியை மறந்து இகலோக புத்திமட்டு முடைய பகுத்தறிவில்லா ஜன்மங்களாகிய மிருகங்கள் பட்சிகள் முதலியவைகள்.

3. அதமஜாதி:—இருவகைப் புத்தியுமின்றியுள்ள மரம் செடி கொடி முதலிய சரீரங்களாம்.

மேல்பங்கிட்டுக் காட்டியபடி உண்டான இந்தத் தூலபூதம் ஒவ்வொன்றிலும் தன் அம்சம் அரைபாகமும், மற்ற நான்கு பூதங்களின் நான்கு அரைக்கால் பாகங்களும் சேர்ந்திருப்பதால் அதிலிருந்து ஐந்து தத்துவங்கள் உண்டாயின வென்றும். இவ்வாறு 5 பூதங்களினின்றும் 25 தத்துவங்கள் உற்பத்தியாயின வென்றுமுரைத்தோ மல்லவா!

அவற்றின் விவரம்.

ஆகாயத்தின் அம்சத்தில் இருந்து உண்டானவை:—

1. ஆகாயத்தினிடத்தில் ஆகாயம் (அதாவது ஆகாயத்தின் தன் ன்ம்சமாகிய அரைப்பாகத்திலிருந்துண்டானது)=மோகம்.
2. ஆகாயத்தில் வாயு (ஆ $\frac{1}{2}$ பாகத்தோடு வாயுவின் $\frac{1}{8}$ பாகம் கூடியதால் உண்டானது)=வெட்கம்.
3. ஆகாயத்தில் அக்னி (மேற்கண்டவாறே ஆ $\frac{1}{2}$ பாகத்தோடு தேயு $\frac{1}{8}$ கூடியது)=பயம்.
4. ஆகாயத்தில் அப்பு (மேற்கண்டவாறே அறிக)=துவேஷம்.
5. ஆகாயத்தில் பிருதிவி=ஆசை. ஆக 5

(மற்ற பூதங்களின் உற்பத்தி விவரத்தையும் இவ்வாறே யுணர்க.)

வாயுவிலிருந் துண்டானவை :—

1. வாயுவில் ஆகாயம்=தத்தல்.
2. வாயுவில் வாயு =ஓடல்.
3. வாயுவில் அக்னி =இருத்தல்.
4. வாயுவில் அப்பு =நடத்தல்.
5. வாயுவில் பிருதிவி=கிடத்தல். ஆக 5

தேயுவி னம்ஸத்திலுதித்தவை :—

1. தேயுவில் ஆகாயம்=சங்கமம்.
2. தேயுவில் வாயு =ஆலசியம்.
3. தேயுவில் தேயு =நித்திரை.
4. தேயுவில் அப்பு =தாகம்.
5. தேயுவில் பிருதிவி=பசி. ஆக 5

அப்புவி னம்ஸத்திலுதித்தவை :—

1. அப்புவில் ஆகாயம்=சுக்கிலம்.
2. அப்புவில் வாயு =இரத்தம்.
3. அப்புவில் தேயு =வியர்வை.
4. அப்புவில் அப்பு =சிறுநீர்.
5. அப்புவில் பிருதிவி=வாய்நீர் ஆக 5

பிருதிவியி னம்ஸத்தில் உற்பத்தியானவை:—

1. பிருதிவியில் ஆகாயம்=உரோமம்.
2. பிருதிவியில் வாயு =நரம்பு.
3. பிருதிவியில் தேயு =சர்மம்.
4. பிருதிவியில் அப்பு =மாமிசம்.
5. பிருதிவியில் பிருதிவி=அஸ்தி. ஆக 5

மொத்தம் 25

இந்த 25 தத்துவங்களும் சேர்ந்தே தூலதேகமுண்டாயிற்று.

சர்மம், உதிரம், மாமிசம், நரம்பு, என்பு, மூளை, சுக்கிலம் என்னும் சத்த (ஏழு) தாதுக்களாலாகிய இம்மானுட தேகத்தில் மூன்று தேகங்களும் ஐந்து அவஸ்தைகளும், ஐந்து கோசங்களும் அடங்கி யிருக்கின்றன.

3 தேகங்கள் என்பன:— (1) ஸ்தூலதேகம் (2) சூக்குமதேகம் (3) காரணதேகம்.

இவற்றுள்:—

(1) ஸ்தூலதேகம்:—மேற்கண்ட 25 - தத்துவங்களும் கூடிய இச்ச சரீரம்.

(2) சூக்குமதேகம்:— ஞானேந்திரியங்கள் 5- கன்மேந்திரியங்கள் 5- பிராணாதி வாயுக்கள் 10-அந்தக்கரணங்கள் 5 - இவை 25-ம் கூடியது சூக்குமசரீரம்.

(3) காரணசரீரம்:—அவித்தையே காரணசரீரம். இதுதான் அஞ்ஞானம் என்பது. ஆவரணம் என்பதும் அனுபவத்தில்இதுவே. இதுதான் ஆன்மா மரணகாலத்தில் ஸ்தூலதேகத்தை விட்டு நீங்கும்போது சூக்கும தேகத்தைத் தன்னுள் அடக்கிக்கொண்டு, ஆன்மா அச்சன்மத்தில் செய்த கன்மங்களை மறுஜன்மத்தில் அனுபவிப்பதற்காக அதோடு ஒட்டிக்கொண்டு செல்ல ஒரு பசைபோலிருப்பது. இவ்வாறு மறுபடி ஸ்தூல சூக்கும தேகங்கள் உண்டாவதற்கு இது காரணமா யிருப்பதால் இதற்குக் காரணசரீரம் எனப் பெயர்வந்தது. இதை யொழித்தாலே முத்தியடையலாம். இதையனுபவமா யறிந்தாலன்றி எப்படியொழிப்பது? அஞ்ஞானமென்பதும், அவித்தையென்பதும், ஆவரணம் என்பதும் இதுவே. மனச்சேட்டையை யடக்கியபின் அதற்குமேல் அங்கென்ன விருக்கிறதென்று அறிவால் எதிரிட்டுப் பார்க்கும்போது, ஒன்றுமில்லாத சூனியமாகிய இருளே தோன்றுமென்றும், அதுவே காரணசரீரம் என்றும், தன்னாலறியப்பட்ட அது தானல்ல வாதலால் அதை விட்டு அதையறியும் தன் சொரூபத்தைத் தரிசிப்பதே தன்னை யறிதலென்றும், அதுவே ஞானம் என்றும் ஆன்றோர்கூறியுளர். இந்த ஞானத்தை யடைந்தாலே அஞ்ஞானம் அல்லது ஆவரணம் என்ற இக்காரணசரீரம் ஒழியும்.

இக்காரணசரீரம் ஒழிந்தால் ஆன்மா பிரியும்போது சூக்கும சரீரம், தன்னைக் கூட அழைத்துச் செல்லும் ஆசாமியில்லாததால், உலையிரும்புண்ட

நீர்போல் அழியும். இவ்வாறு மூன்றுதேகங்களும் அழிந்தபின்பே ஆன்மா பிறப் பிறப்பாகிய விலங்கினின்று விடுபடும்.

இப்போது நாம் கூறிய ஸ்தூல, சூக்கும, காரணமாகிய மூன்று சரீரங்களில், சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, என்னும் மூன்றவத்தைகளும் பஞ்ச கோசங்களும் அடங்கி யிருக்கின்றன. (தொடரும்)

சீடன்

உண்மை யுணர்

சகோதர சகோதரிகளே!

உலக அனுபவத்தில் பலவிஷயங்களில் நாம் உண்மையையுணரச்சக்தியின்றி பொய்யை மெய்யென நம்பிப் போற்றுகிறோம். அதனால் நாம் ஒரு பயனுமடையாமற் போவதோடு அறிவாளிகள் நம்மை மூடரென்று மதிக்கும்படி செய்து கொள்கிறோம். இதுமட்டுமல்ல. நாம் அப்படிப் பொய்யை மெய்யென்று போற்றுவதால், பொய்க்கு (அதையுடையவர்கட்கு) உற்சாகத்தையளித்து அது அதிகமாகும்படிச் செய்கிறோம். இவற்றோடு நமக்கு நாமே ஒரு தீங்கு செய்துகொள்கிறோம். அதாவது நாம் பொய்யின் வெளித்தோற்றத்திலுள்ள குறிகளைக்கண்டு மெய்யென்று நம்பும் பழக்கமுடையவர்களாய் இருப்பதால், அவற்றிற்கு மாறானவையும் வேறானவையுமான மெய்யின் குறிகளைக்கண்டு அது மெய்யென் றறிந்துகொள்ள முடியாதவர்களாயிருக்கிறோம். இதனால் எவ்வளவோ நன்மையையும் புண்ணியத்தையும் இழந்துவிடுகிறோம்.

நேயர்களே! இவ்வாறு நாம் தவறிப்போவது பல விஷயங்களிலாயினும், இக்காலத்தில் அதிகமாய்ச் சம்பவிக்கும் ஒரு விஷயத்தைப்பற்றியே நாம் இங்குக் கூறக்கருதினோம். அதாவது இக்காலத்தில் வெளிக்கு ஞானிகளைப்போல் நடிக்கும் வேடதாரிகள் அதிகமா யிருக்கிறார்களென்பது யாவருமறிந்ததே. பெரும்பாலோர், ஆடவரும் மாதர்களும், அவ்விஷயத்தில் உண்மையை யுணராமல் ஏமாந்து அவர்களை உண்மை ஞானிகளென்று மதித்துப் போற்றித் துன்பமடைகிறார்கள். ஆகையால் இவ்விஷயத்தில் பொய்க்கும் உண்மைக்குமுள்ள வித்தியாசங்களை யாவரும் கூடியவரையில் உணரவேண்டுமென்ற நோக்கங் கொண்டே நாம் இதைவரையலுற்றோம். ஆயினும் சிலர் இதைக்கண்டு கோபமடையக்கூடும். "குற்றமுள்ள நெஞ்சு குறு குறுக்கும்" என்ற பழமொழியு மொன்றுண்டு. ஆனால் நாம் எள்ளளவேனும் ஒருவரை நிந்திக்க எண்ணங்கொண்டு இதை வரைய வில்லை. உண்மைஞானிகளின் குணங்குறிகளை ஆன்றோர் அருளியுள்ளபடிவிளக்கிக் காட்டிப் பொது நன்மைபுரிய வேண்டுமென்ற ஒரு எண்ணமே இதைச் செய்யும்படி நம்மைத் தூண்டியது.

இப்போது உலகில் சாதாரணமாய்ப் பலர் தங்களுக்குச் சற்றும் பொருத்தமல்லாத பட்டங்களைத் தாங்களே சூட்டிக்கொள்கிறார்கள். முற்காலத்தில் அவ்வாறு செய்ய முடியாது. சரியாய் நான்கு வரிகள் எழுதத்தெரியாதவர்களும், ஒரு சபையில் திடீலென்று ஒரு விஷயத்தைப்பற்றி வாய் திறக்கவே முடியாதவர்களும், அவ்வித அனுபவமே சற்றுமில்லாதவர்களும், சாதாரணக் கல்விகற்கவும் கொஞ்சம் உலக அனுபவம் அறியவும்கூட வயதே போதாதவர்களும், வித்வான், நாவலர், பாவலர், ஞானக்களஞ்சி

யம், முதலிய பட்டங்களை வைத்துக்கொள்கிறார்கள். "என் விலாசத்தில் என்பெயருக்குமுன் 'முத்தமிழ்க்கவி* * *' என்று எழுதவேண்டும்" என்று தாங்களே அறிவித்து "நுணலை தன் வாயாற்கெடும்" என்பதுபோல்தங்கள் அறியாமையைத் தாங்களே வெளியிட்டு விடுகிறார்கள்.

முற்காலத்தில் தக்க ஆசான் ஒரு சீடன் தகுதியை யனுபவமாயறிந்து ஆசீர்வதித்துத் தன் கரத்தால் அளித்தால்தான் ஒருவன் காஷாய மணிந்து சந்நியாசியாகலாம். "உனக்கு'யார் காஷாயம் கொடுத்தது?" என்று ஒருவர் கேட்டால் அவன் பதிலளிக்க வேண்டும். இப்போதோ காலணா கொண்டுபோனால் கடையில் சிவப்புக் காவிக்கல் தாராளமாய்க் கிடைக்கிறது. காசு கொடுத்தால் விபூதி உருத்திராக்கம் முதலிய யாவும் கிடைக்கின்றன. நமது கரங்களே நமக்கு அவற்றை யணிந்து விடுகின்றன. ஆகையால் இக்காலத்தில் ஏராளமான சுவாமிகளையும், சந்நியாசிகளையும், எதிகளையும், ஏகாங்கிகளையும், பிரம்மங்களையும் காணலாகும்.

சாதாரணமாய்த் தக்க கல்வியாராய்ச்சியாவது ஞானாப்பியாசத்தில் அனுபவமாவது இல்லாதவர்களெல்லாம் வெளித்தோற்றத்தைக் கண்டே மயங்கி மோசம் போகிறார்கள். எப்படியெனில்:— சுவாமியார் என்றால், முண்டிதம் செய்துக் கொண்டு காஷாயம், உருத்திராக்கமாலையோ துளசி மணியோ அணிந்து கொண்டு, விபூதி யல்லது திருமண் காப்பைப் பரக்கத் தீட்டிக் கொண்டிருந்தால் போதும். இதுவே சுவாமியாருக்கு அடையாளம் என்று கருதிக் கொள்கிறார்கள். நாம் இக்கடவுட் சின்னங்களை யலட்சியமாய்க் கூறுவதாகக் கருதவேண்டாம். மெய்ப் பக்தியோடு கடவுள் சிந்தனையிலிருக்கும் ஞானவான்களும் அவற்றை யணிந்து கொள்கிறார்களென்பது அனுபவமான விஷயமே. ஆனால் அவற்றை யணிந்து கொண்டிருப்பதனாலேயே ஒருவனை ஞானியென மதித்து விடலாகாதென்பதே நாம்கூறுவதன் கருத்து. ஞானி அவசியம் அவற்றை யணிந்து கொள்ள வேண்டுமென்ற விதியுமில்லை. ஆகையால் அவற்றை யணியாதவர்களெல்லாம் ஞானிகளல்ல வென்றும் கருதலாகாது.

இன்னும் உருத்திராக்கம் துளசி மணிகள் இவற்றிற்குப் பூரணமான தங்கமலர்கள் கட்டி, கௌரீசங்கத்தை ஒரு மொத்தைப் பொன்னால் மறைத்து நவரத்தினங்களிழைத்து அணிந்து கொண்டிருந்தால் அவர்களை இன்னும்பெரிய சுவாமியார் என்று எண்ணிக்கொள்கிறார்கள்.

ஒருவன் லங்கோடு அல்லது கௌபீனம் மட்டும் கட்டிக்கொண்டிருந்தால் அவன் ஞானியே யென்று எண்ணி மோசம் போகிறார்கள். அதிலும் அவன் ஆகாரத்தைக் கரங்களிலேயே வாங்கி யுண்டால் இன்னும் பெரிய ஞானியே. அதோடு பகிரங்கத்தில் வாயிற் பேசாமல் சமிக்கையாய்ப் பேசினால் அல்லது கையில் எழுதிக்காட்டினாலோ, அவன் முற்றத்துறந்த முழு ஞானியென்றே மயங்கி அவன் பின்னால் ஓடுகிறார்கள். உண்மை ஞானிகளிலும் ஒவ்வொருவர் கொஞ்சகாலம் மௌன விரதமனுஷ்டிப்பதுண்டு. ஆனால் அது ஏக தேசத்தில் எங்கோ ஒருவர்.சிலர் மௌனத்தை யடைந்தே யிருப்பதுமுண்டு. ஆனால் அனேகர் வெளி வேடத்தால் மட்டும் அப்படி யபிநயம் செய்து யாவரையும் வஞ்சித்துக் கஷ்டமின்றி காலங் கழிக்கிறார்கள். ஆகையால் இத்தகைய வெளித்தோற்றங்களை மட்டும் காண்பதாலேயே நாம் ஒருவரைஞானியென்று மதித்துவிடலாகாது. இக்குறிகளெல்லாம் ஞானிக்கு இருக்க வேண்டுமென்ற நியதியேயில்லை. இவற்றால் நாம் ஏமாந்து போகாம

லிருப்பதற்காக உண்மை ஞானியிடம் எத்தகைய குணங்குறிகள் கட்டாயம் இருக்கவேண்டுமென்பதை யாவரும் அறிந்திருக்க வேண்டுவது அவசியம். அதைக்கருதியே யிவ்விஷயத்தை வரையலாயினோம்.

சிலர் "ஓ! இவனென்ன மனைவி மக்களோடிருக்கவில்லையோ. இவனும் நம்போல் தொழில் செய்து ஜீவிக்கவில்லையோ? இவனுக்கு எப்படி ஞானம் வந்துவிட்டது" என்று கருதுகிறார்கள். சிலர் "இவன் என்ன சாமியார்! நம்மைப்போல்தான் நன்றாய்ச் சாப்பிடுகிறான்; மலசல விசர்ச்சனம் செய்கிறான்; நம்மைப்போல் பேசுகிறான்; உடைகள் அணிந்து கொண்டிருக்கிறான்; இவன் எப்படி சுவாமியாராய் விடுவான்" என்று கருதுகிறார்கள். அந்தோ இது ஞானியின் இலக்ஷணம் இன்னதென்றறியாக் குற்றமேயன்றி, வேறில்லை. அவற்றை வாசாஞானமா யேனும் அறிந்துகொள்ள வேண்டுமென்று ஒருவன்கருதினால், அவன் அனேகசாத்திரங்களை யாராய்ச்சிசெய்து அவற்றின் சாராம்சங்களை ஒன்று திரட்டி மனதில் கிரகித்துக்கொள்ள வேண்டும். ஆனால் அப்படிச்செய்ய எல்லோருக்கும் போதுமான கல்வியும் சிரத்தையும், அவகாசமும் இரா. ஆகையால் அவ்வாறு ஆராய்ச்சிசெய்த அனுபவ ஞானிகளாகிய மகான்கள் நம்போலியர் அறிந் துய்யும்பொருட்டு மெய்ஞ்ஞானிகளின் இலட்சணங்கள் இன்னின்னவை யென அருளி யிருக்கின்றனர். அவற்றையே மீண்டு சுருக்கமாகக்கூறி யாவரும் உணரும்படி செய்யவேண்டு மென்பதே நமது கருத்து.

சிலர் ஞானிகளுக்கு அவசியமல்லாத விதிநிஷேதங்களையிவர்களே கற்பித்துக் கொண்டு, அவற்றைக் கருதி ஞானிகளை யறிந்து கொள்ளாமல் மயங்கி விடுகிறார்கள்.

1. ஜாதி மத பேதத்தால் ஒருவரை ஞானி யென்றும் அல்ல வென்றும் தீர்மானிக்கலாகாது. எந்தச் சாதியிற் பிறந்தவராயினும் ஞானியா யிருக்கக் கூடும்.

யாவர்க்கும் பூர்வ ஜன்ம வினைப்பயன்படிக்கே தேகம் அளிக்கப்படுவதால் ஞானி உலகோர் பூஜிக்கத் தக்க ஜாதியிற் பிறந்தவனா யிருந்தாலுமிருக்கலாம், யாவரும் இகழ்ச்சியாகக் கூறத்தக்க ஜாதியில் பிறந்தவனாகவிருந்தாலும் இருக்கலாம். அவ்வாறே வினைப்பயன்படி ஞானி விவசாயம் செய்பவனாயிருந்தாலும் இருக்கலாம், வர்த்தகம் செய்தாலும் செய்யலாம், அரசனாயிருந்தாலு மிருக்கலாம், பிச்சை யெடுத்தாலும் எடுக்கலாம். இது உலகோர் அனுபவமாயறிந்த விஷயமே. திருட்டாந்திரங்களை மீண்டுக் கூறப்புகின் சஞ்சிகை யிடங்கொடாதென அஞ்சுகிறோம். அவ்வாறே யிவையாவற்றிற்கும் மேற்கோள்களைக் கூறவும் அஞ்சிவிடுக்கிறோம். ஆயினும் இவை யாவும் ஆன்றோர்களால் அருளப்பட்டிருப்பவைகளே யென்று இதை வாசிக்கும் சகோதர சகோதரிகள் பூரணமாய் நம்பலாகும்.

2. துறவியாயிருப்பவன்றான் ஞானி, மற்றபேர் ஞானியாயிருக்க முடியாதென்று கருதலாகாது. பிராரப்தவினைப்பயன்படி ஞானி எந்த ஆசிரமத்திலேனும் இருக்கலாகும். ஆனால் இல்லறத்திலுள்ள ஞானிகள் (புளியம் பழமும் அதன் ஓடும் ஒன்றாயிருப்பது போல்தோன்றினும், உண்மையில் பழம் ஓட்டோடு சம்பந்தப்படாமலே யிருப்பது போலவும், தாமரையிலைமேலுள்ள நீர்த்திவலை இலையில் ஒட்டாது தாக்கற்றிருப்பதுபோலவும்) மேலுக்குப் பார்த்தால் குடும்பத்தில் சம்பந்தப்பட்

டிருப்பவர்களைப்போலும், உலகத்தார்போல் நடப்பவர்கள்போலவும் காணப்படினும், அது அவர்கள் அபிநயிக்கிற வெளிவேடமேயன்றி அவர்கள் மனம் எதிலும் பற்றுமல் தாக்கற்றே நிற்கும்.

அவர்களை மற்றையர் அறிந்து கொள்வது மிக்க கஷ்டம். மிகநுட்பமாய் அவர்கள் குணங்குறிகளைக் கவனித்து வந்தால், அவர்கள் நடிக்கும் உலகநடிப்பு வெளிவேடமே யென்றும், உண்மையில் உலகவிஷயங்களில் எதுவும் அவர்கள் மனதில் தாக்குவதில்லை யென்றும் கஷ்டத்தின்மே லறியலாம். ஆனால் "கள்ளனைக் கள்ளனறிவான்," "பாம்பின் கால் பாம்பறியும்" என்றபடி இல்லறத்திலிருந்தே மனதையடக்கும் ஞான அப்பியாசியே அவர்களை யெளிதில் அறிந்து கொள்வான். அவர்கள் வெளிக்குப் பாமரர்கள் போல் இருப்பார்களே யன்றி சாத்திர விசாரணையில் தேர்ச்சியடைந்த பண்டிதரெனக் காட்டிக் கொள்ளவே மாட்டார்கள். ஆனால் அவர்களைக்கண்டு பாமர ஜனங்கள் மயங்கவேண்டிய சம்பவம் நேர்வதில்லை. இல்லறத்தை நீத்து சந்நியாசிகள், துறவிகள் போல் இருப்பவர்களையே ஜனங்கள் ஞானி யென்று நம்பிக் கொள்வது.

3. சிலர் "இவனிடத்தில் ஒரு மகிமையுமில்லையே. இவன் எப்படி ஞானியாய் விடுவான்?" என்று தவறான அபிப்பிராயங் கொண்டிருப்பதால், தந்திரத்தால் கள்ளத்தனமாய் ஒருவன் செய்யும் ஏதேனும் செய்கையைக் கண்டு மயங்கி, இவர்தாம் மெய்யான சுவாமியார் என்று எண்ணிக் கொள்கிறார்கள்.

ஞானிகள் அற்புதங்களைச் செய்யவேண்டும் என்றாவது, அவர்களிடத்தில் மகிமை விளங்கவேண்டு மென்றாவது எந்தச் சாத்திரத்திலும் கூறியிருக்கவில்லை. அதற்குமாறாக,

"அட்டமா சித்திகளும் அனைத்துள்ள பேறுகளும்
கட்டமாங் கதிகள்தரும் பரகதிகா ணக்கொடா"

என்று தேவி காலோத்திரத்தில் பரமசிவமே பார்வதிக் குபதேசித்ததாகக் கூறப்பட்டிருக்கிறது.

எல்லா அற்புதச் செய்கைகளும் அஷ்டமாசித்தியில் அடங்கி விட்டிருக்கின்றன. அதற்காக முயற்சி செய்வது காமியத்தவம் (இச்சையோடு செய்யும் தவம்) என்றும், அதனால் முத்தி கிடையாதென்றும், அது வேடிக்கை விளையாட்டு போன்ற சித்திகளை மட்டுமே தருமென்றும், ஒரு இச்சையுமின்றிச் செய்யும் நிஷ்காமிய தவம் ஒன்றே மோக்ஷத்தை யளிக்க வல்லதென்றும் கூறப்பட்டிருக்கிறது. முற்காலத்திலுள்ள பெரியோர்களிற் சிலர் இரண்டிற்கும் முயற்சி செய்து இரண்டையும் அடைந்தார்கள். ஒன்றுக்கு முயல்வோர் ஒன்றை மட்டுமே யடைவார்கள்.

ஆயினும் சில ஞானிகளுக்குப் பிராரப்த நல்வினைப்பயனால், அவர்கள் கோராமலே அவர்களை யறியாது சில மகிமைகள் தோன்றுவதுண்டு. அது உலக அனுபவம். ஞானியும் பிராரப்த வினையை யனுபவித்தே யொழிக்கவேண்டு மென்று முன்னமே கூறியிருக்கிறோம். அதில் நல்லது கெட்டது இரண்டு முண்டு. ஆனால் ஞானிகள் அதை யனுபவிப்பதற்கும் நாம் அனுபவிப்பதற்கும் மிக்க வித்தியாசமுண்டு. ஞானிகள் அனுபவிப்பதாய் உலகோர்க்குத் தோன்றுமேயன்றி, அவர்களுக்கு அது உறுத்தாது. சில

துறவிகள் ஜனங்களால் மிகவும் பூஜிக்கப்பட்டு கொண்டாடப்படுகிறார்கள். சில துறவிகள் அடித்து இம்சிக்கப்படுகிறார்கள். சிலர் பல நாள் பொசிப்பில்லாமலே யிருக்கிறார்கள். யாவும் அவரவர் பிராரப்த வினைப்பயன்படி நடப்பதே யன்றி, அதனால் அவர்களுக்குள் உயர்வு தாழ்வு முதலிய எள்ளளவு வித்தியாசமும் கிடையாது. யாவரும் ஒரே நித்தியானந்த நிலையிலிருப்போரே; தேகம் நீங்கிய பின்னும் ஒரே அனுபவத்திலிருப்போரே.

கொஞ்ச நாள் பொசிக்காதிருப்போரிடம் மட்டும் ஏதோ மகிமையிருப்பதாக ஜனங்கள் நினைக்கிறார்கள். அவர்களுக்கு ஆகாரத்தைப் பொசிக்க வேண்டிய வினைப்போகம் அவ்வளவு குறைவாயிருக்கிற தென்பதே உண்மை.

தேகத்திற்கு ஆகாரம் அவசியம். பிராரப்த வினை யொழியுமட்டும் தேகம் இருந்தே தீரும். ஆகையால் பசிவந்தபோது ஞானிக்கும் ஆகார இச்சை வந்தே தீரும். உண்ணப்பட்ட ஆகாரம் மல ஜலமாய் வெளிக்கழிய வேண்டியதும் தேகம் நிலைத்திருப்பதற்கு அவசியமானதே. இவற்றால் ஒருவர்க்கும் பாபமாவது புண்ணியமாவது உண்டாவதில்லை. ஞானிக்கும் இவை யவசியமே யாதலின் ஞானி இவற்றை நிக்கிரகிக்க வேண்டுமென்கிற விதி கிடையாது.

ஆகையால் ஒருவனிடம் மகிமைகள் இல்லாததால் அவன் ஞானியல்லவென்றும், நம்போல் போஜனம் செய்கிறபடியால் அவன் ஞானியல்லவென்றும், இக் குறிகளாலும் ஒருவரை ஞானி ஞானியல்ல வென்று தீர்மானித்துக் கொள்ளலாகாது.

இனி உண்மை ஞானிகளிடம் கட்டாயமா யிருக்கவேண்டிய குணங்குறிகள் இன்னவை யென்று கூறுவாம்:— (தொடரும்.)

கிளிப்பிள்ளை.

மாணவர் பக்கம்

அன்னியபாஷைக் கல்வி

கீழ்க்கண்ட விஷயத்தை மாணவர்கள் மட்டுமல்ல, முக்கியமாய் உபாத்திமார்களும் பெற்றோர்களும்கூட அவசியம் கவனித்துக் குறையை நீக்க முயலுமாறு பிரார்த்திக்கிறோம்.

எத்தேசத்திலும் இராஜாங்கத் தாருடைய பாஷையைக் கற்கவேண்டியது பலவிஷயங்களுக்கும் அவசியமே யாகிறது. அவ்வாறே ஆள்வோரும் நமது பாஷையைக் கற்றுக்கொள்ளவேண்டியது- (குடிகளின் விஷயங்களை நன்குணர்ந்து அவர்களுக்கு அதிருப்தி முதலிய உண்டாகாமல் ஆட்சி செய்வதற்கு) அவசியமே யாகிறது. ஆயினும் ஈண்டு நம் விஷயத்தைமட்டும் நாம் கவனிப்போம்.

நமது நாட்டாரில் ஆங்கில பாஷையைக் கற்போரனைவரும் (எங்கோ மிகச்சிலர் தவிர) ஜீவனார்த்தமாகவே யதைக்கற்கிறார்க ளென்பது வெளிப்படையான விஷயமே. இப்போது பாடசாலைகளில் ஆங்கிலபாஷை கற்பிக்கப்படுகிற முறைமை திருப்திகரமான தல்ல வென்பதே கற்றோர் பலருடைய அபிப்பிராயமா யிருக்கிறது. இப்போது கற்பிக்கப்படும் முறைமை

யொரு பெருந்தீங்கிற்கும் காரணமா யிருக்கிறது. அதாவது இம்முறைமையால் தாய்ப்பாஷை மங்கிப்போம் என்பதில் சற்றும் சந்தேகமே யில்லை. தாய்ப்பாஷை கட்டாய பாடமாக வைக்கப்பட் டிருந்ததை யெடுத்து விட்டதுமுதல், மாணவர்களுக்கு அதில் சிரத்தையும் விருப்பமும் குறைந்து கொண்டே வருகிறது என்பது அனுபவம்.

அதோடு இப்போது ஆங்கிலம் கற்கும் மாணவர் ஆங்கில பதங்களுக்குச் சரியான தமிழ்ப் (தாய்ப்பாஷை) பதம் என்ன வென்பதைக் கற்பதில்லை. அதைப்பற்றிக் கவனிப்பதே யில்லை. ஏனெனில் அவ்வாறு கற்பிக்கப்படுவதில்லை. இதனால் அன்னிய பாஷையையும் அவர்கள் சரியாய்க் கற்காதவர்க ளாகிறார்கள். பிறகு நம்மவர்க்கு அதை நமது பாஷையில் விளக்கிக் காட்டிப் போதிக்கவும் சக்தி யற்றவர்க ளாகிறார்கள்.

பாடசாலைகளில் ஆங்கிலப் பதங்களுக்கு ஆங்கிலப் பிரதிபதங்கள் மட்டுமே போதிக்கப் படுகின்றன. இதனால் ஆங்கில பதத்திற்குச் சரியான தமிழ்ப்பதம் கூற மாணவர்களுக்குத் தெரிவதில்லை. ஆகவே தமிழ் பேசிக் கொண் டிருக்கையிலேயே ஒரு விஷயத்திற்குச் சரியான தமிழ்ப்பதம் கூற முடியாமல் மத்தியில் ஒரு ஆங்கிலப் பதத்தையே யுபயோகிக்கிறார்கள். சுமார் பத்து தினங்கட்கு முன் ஒருநாள் இரவுநடந்த ஒரு பிரசங்கத்தைப் பற்றி இருவர் கீழ்க்கண்டபடி சம்பாஷித்துக் கொண்டு செல்கையில் நாம் கவனித்தோம். அவர்கள் சம்பாஷணை பின் வருமாறு.

'க' என்பவர்—இரவு லெக்சர் (Lecture) எப்படி யிருந்தது?

'ப' என்பவர் — நேர்த்தியாகவே யிருந்தது ஆனால் ஒரிஜினாலிடி (Originality) கொஞ்சங்கூட இல்லை. ஸப்ஜெக்ட்ஸ் (Subjects) சிலது இன்ஸ்ட்ரக்டிவ்வா (instructive) இருக்கிறது. சிலது வேக்கா (Vague) இருக்கிறது.

க—அதோடு இடையிடையில் அவன் எடுத்துக்கொண்ட ஸப்ஜெக்டுக்கு கொஞ்சம்கூட கனக்ஷனே இல்லாத பாரின் (Foreign) ஸப்ஜெக்ட்ஸை (Subjects) இன்க்ளூட் (Include) பண்ணிக் கொள்கிறான். * * * *

நேயர்களே! இவர்கள் இவ்வாறு பேசுவதற்குக் காரணம் ஆங்காங்கு இவர்கள் உபயோகித்த ஆங்கிலப் பதங்களுக்குச் சரியான தமிழ்ப்பதம் இவர்கள் மனதிற்கு வாராததே. சிலவற்றிற்கு அகராதியைப் பார்த்தாலன்றி இவர்களால் தமிழ்ப் பதம்கூற முடியாது.

இந்த நிலைமை இப்போதே சீர்ப்படுத்தப் படாமல் வளர்ந்து கொண்டே போமாயின் பிறகு தாய்ப்பாஷையில் சரியாய்ப் பேசுவதற்கே இவர்கள் சக்தியற்றவர்க ளாவார்கள். அந்தோ சொல்லற்கரிய மகிமை வாய்ந்ததும், பூரணமுடையதும், தெய்வீகம் பொருந்தியதுமான நமது அரியதமிழ் எக்கதியாகும்? இதை நம் நாட்டிலுள்ள பிரமுகர்களான கல்வியாளர்கள் கவனியா திருப்பது என்ன துக்கமான பெருங்குறை? என்பதையவர்கள் சிந்தித்து, இனியேனும் தயவுசெய்து அக்குறையை நீக்கமுயல்வார்க ளென்று பிரார்த்திக்கிறோம்.

நான்காவது ஐந்தாவது ஆறாவது பாரங்களில் வாசிக்கும் மாணவர்களில் பலரை நாம் சோதித்துப் பார்த்தோம். அவர்களுக்கு வைக்கப்பட் டிருக்கும்

ஆங்கில கட்டாய பாடபுத்தகத்தின் ஒரு பாடத்தில் ஒரு வாக்கியத்திற்குப் பதம் பிரித்து அர்த்தம் கூறும்படி அவர்களைக் கேட்டால், சற்றும் மனக் கலக்கமின்றி "தெரியாதுங்க ஸார்; எங்களுக்கு அப்படி டீச் பண்ணுகிற தில்லை" என்று கூறிவிடுகிறார்கள். இதனால் மாணவர்கள் ஆங்கிலத்தைத் தமிழில் மொழிபெயர்க்கும் சக்தி குன்றிவிடுவதோடு இலக்கண விற்பத்தியும் குன்றி விடுகிறது.

எவ்வாறெனின், அன்னியபாஷையாகிய ஆங்கில பாடத்தின் ஒரு வாக்கியத்திலுள்ள வார்த்தைகளுக்கு இலக்கணங் கூறும்போது, அது இன்ன சொல்லென்றும் (parts of speech) இன்ன வார்த்தை யின்ன வார்த்தையைத் தழுவிநிற்கிறது, அல்லது இன்ன வார்த்தையைக் கொண்டு முடிகிறது என்று தெரிந்து கொள்வதும் (syntax), பல சிறு வாக்கியங்கள் ஒன்று சேர்ந்த ஒரு பெரியவாக்கியத்தை(Compound and Complex Sentences) விபாகித்து அதிலுள்ள சிறு வாக்கியங்களில் இன்ன வாக்கியம் இன்னதைக் கொண்டு முடிகிறதென்று (Analyzing) அவற்றின் சம்பந்தத்தை யுணர்ந்து கூறுவதும் கஷ்டமே யாகும்.

அந்த வாக்கியங்களிலுள்ள ஒவ்வொரு வார்த்தைக்கும் தமிழ் அர்த்தம் தெரிந்து வாக்கியத்தை மொழி பெயர்க்கவும் அறிந்திருந்தால், அதைக்கொண்டு மேற்கண்ட விஷயங்களை யெளிதில் உணர்வார்களென்பதை யனுபவத்திற்காணலாம்.

உபாத்திமார்கள் கருணை கூர்ந்து நம் தாய்ப்பாஷையின் க்ஷேமத்தையும் பிள்ளைகளின் நன்மையையும் கருத்தில் வைத்து, இக்குறையைத் தாங்களாகவே நீக்க முயல்வார்களென்று கோரியே யிதை வரையலாயினோம்.

மாணவர்களாகிய நண்பர்களே! பாடசாலையில் இதைக் கற்பிக்கிற தில்லை யென்ற காரணத்தைக் கொண்டே நீங்கள் தாய்ப்பாஷையை யலட்சியம் செய்து விடுவது பெருந்தவறாகும். 3-வது பாரத்திலும் அதற்கு மேல் வகுப்புகளிலும் வாசிக்கும் நீங்கள் சிறு பிள்ளைகளைப் போல் நமது நன்மைக்கு நாம் கல்விகற்கவேண்டும் என்ற உணர்ச்சி யின்றி பெற்றோர்க்கும் உபாத்தி யாயருக்கும் பயந்து கல்வி கற்பவர்களல்லவே. மேற்கண்ட குறையாலுள்ள கெடுதிகளைச் சிந்தித்துப் பாருங்கள்! தாய்ப்பாஷையை யலட்சியம் செய்தால் பிற்காலத்தில் உங்கள் நிலைமையும் நம் நாட்டின் தெய்வீகத் தன்மையும், ஞான பூமி என்கிறபெயரும் என்ன கதியாகுமென்பதை நினைத்துப் பார்த்தால், உங்களில் சுத்த மட்டியாயிருப்பவன் மனம் கூடப் பதைக்குமென்பது நிச்சயம். ஆகையால் பாடசாலையில் கற்பிக்காவிட்டாலும், நீங்களே சிரத்தை யெடுத்துக் கொண்டு இக்குறையை நீக்கிக் கொள்ளலாகும். நீங்கள் மட்டும் மனம் வைத்து முயன்றால் சுலபமாகவே இதை நிறைவேற்றிக் கொள்ளலாம். நீங்கள் கோரினால் இது விஷயத்தில் உபாத்தியாயர் உதவி கட்டாயம் கிடைக்கும் என்பதிற் சற்றும் ஐயமின்றாம்.

இதுகாறும் நம் நாட்டில் எச்சந்ததியாரும் தாய்ப்பாஷையையும், அதனாலடையத் தக்க மறுமைப் பயனையும் இவ்வுலக நன்மைகளையும் மறந்ததேகிடையாது. அறிவு வளர்ந்திருப்பதாய்க் கருதப்படும் இக்காலத்தில் பிறந்த நீங்கள் இப்பெருங் குற்றத்திற்கும் அபகீர்த்திக்கும் ஆளாகாமலிருக்கும்படி கடவுள் உங்களுக்குத் தாய்ப்பாஷையில் அன்பையும் ஊக்கத்தை

யும் தந்தருளவேண்டுமாய் அவரை நாம் மனதாரப் பிரார்த்திக்கிறோம்.

பெற்றோர்களும் தம்மக்களின் நன்மையைக் கருதி இவ்விஷயத்தில் கவனத்தைச் செலுத்த வேண்டுமாய்ப் பிரார்த்திக்கிறோம். ஆண்டவன் அருள்புரிவாராக. ஓம் தத்ஸத்

சீடன்.

நித்தியவிதி—முன்னிரவு

(64-ம் பக்கத் தொடர்ச்சி.)

முன்பு மாலைக்காலவிதியைச் சிறிது விரித்துரைத்தோம். இப்பொழுது முன்னிரவில் நடத்தப் படுவதைப் பற்றிச் சிறிது எழுதுவோம். இதில் மத்தியான்னத்துக் குள்ளதுபோலக் காலப்பகுப்புகள் அதிகமில்லை. ஆயினும் முன்னிரவில் (முதல் ஜாமத்தின்) முற்பாதிக்குப் பிரதோஷ மென்றுபேர். நாலாம் ஜாமத்தின் பிற்பாதிக்குப் பிரத்தியூஷ் (விடியற்காலம்) என்றுபேர். ஆக ஒரு ஜாமம் போனுல் இடையில் மூன்று ஜாமங்களுள்ளன. இந்தக் காலத்துக்குத்தான் நிசி (இரவு) என்றுபேர். இதைப் பேரிரவு என்றும் வழங்குவதுண்டு. முதல் ஜாமத்தின் முற்பகுதியாகிய பிரதோஷ காலம் நீங்க எஞ்சிநின்ற அரைஜாமமே முன்னிரவு (பூர்வநிசி) என்று நூல் களில் கூறப்படுகிறது. இந்த முன்னிரவாகிய அரை ஜாமத்துக்குள்ளேயே இரவு நியமனங்கள் செய்யப்படவேண்டும். ஏனென்றால் அக்காலம் சூரிய வெப்பத்துடன் கூடி யிருப்பது. சூரியவெப்பம் உள்ளபொழுதுதான் சகல காரியங்களும் செய்யத்தக்கனவென்பது ஆரியர் சித்தாந்தம். அக்காலத்தில் தான் ஆகாரம் பொசிக்க விரும்புகிறவர்கள் பொசிக்க வேண்டும்- சூரியோ ஷ்ணசம்பந்தம் இல்லாவிட்டால் உண்ட பதார்த்தங்களை ஜீரணிப்பிக்கும் சத்தி ஜாடராக்னிக்கு உண்டாகாது. சூரியன் அஸ்தமித்தபின் ஒரே ஜாம பரியந்தம் அவன் கிரணங்களால் உண்டான உஷ்ணம் பூவுலகில் நிற்கும். அதற்குமேல் வரவரச் சூரியனது உஷ்ணசக்திகுறைவுபடச் சந்திரகிரணத்து க்கு ஆதிக்கம் உண்டாகும். அப்போது குளிர்ச்சி அதிகப்படும். அதனுல் கரு விகரணங்களும் புலன்களும் தத்தம் தொழில்களைச் செய்யச் சக்தியற்றன வாகும். முன்னிரவின் முற்பகுதியாகிய பிரதோஷ காலத்தில் சூரிய வெப் பம் அதிக மிருப்பதால் அப்போதே அக்கினி ஹோத்திரம் சந்தியானுஷ் டானம் முதலிய வைதிகக் கிருத்தியங்களைச் செய்து விடவேண்டும். பிறகு வெப்பம் குறையத் தொடங்கும். அதனுல் உட்கருவிகள் வேலைசெய்யா. பகற்காலத்தில் சரீரத்தி லேறியுள்ள வெப்பமும், அக்கினி காரியங்களால் ஏற்படுகின்ற வெப்பமும் சேர்ந்திருக்கும் சமையத்திலேயே புசித்துவிட வேண்டும். அப்போது விளக்கொளியும் கூடியிருப்பதால் பகற்காலத்தில் உள்ள வெப்பத்துக்குச் சற்று ஏறத்தாழச்சரியான வெப்பம் சரீரத்தில் தரித்திருக்கும். அப்படியிருந்தும் ஜீரணசக்தி மத்தியான்ன காலத்தில்போ லிராது. சற்றுக்குறைவு பட்டுத்தா னிருக்கும். ஆதலாற்றான் பகற்காலத் தைப்போல் இரவில் போஜனநியமம் விதிக்கப்படவில்லை. ஆதலால் முன் னிரவாகிய ஜாமத்துக்குள்ளேயே பொசித்து விடவேண்டும்.

பொசிப்பதிலும் புதிதாகச் சமையல் செய்தவற்றையே பொசிக்கவேண் டும். நேற்று முந்தாநாள் சமைத்ததும், அதிகாலையில் பக்குவம் செய்யப்பட்

டதுமான பதார்த்தம் போஜனார்கமாகாது. சிலர் மத்தியானத்தில் சமைத்த பதார்த்தங்கள் சூரிய வெப்பத்துடன் கூடியிருப்பதால் இரவில் அதைப் பொசிக்கலாமென்று ஒப்புக்கொண்டார்கள். அதுவும் அதமபட்சமாகவே அங்கீகரிக்கப்படும். இரவில் சமைக்கப்பட்டதுகூடச் சந்திரகிரண சம்பந்தத்தால் விஷத்தன்மையையடையுமென்றும் வைத்திய நூல்கள் கூறுகின்றன. பகலிற் சமைத்தவைகூடக் குளிர்ந்துவிட்டால் விஷத்தன்மையை அடையுமென்றும், அது வியாதியஸ்தர்கள் பொசிக்கத்தகாததென்றும் வைத்தியமுணர்ந்த பெரியோர் கூறுகின்றனர். குளிர்ச்சியடைந்த அன்னம் ஜீரணமாகாமல் வியாதியஸ்தர்களுக்குப் பலவிதத்துன்பங்களை உண்டாக்குவது பிரத்தியட்சமாம். பழைய அன்னத்துக்கு விஷத்தன்மையுண்டு என்பதைக் காயங்களிலும் புண்களிலும் அவ்வன்னத்தை வைத்துக் கட்டிப் பிறகு அறிந்து கொள்ளலாமென்று வைத்திய நூல்கள் கூறுகின்றன. காயங்களை யாற்றுவதற்குலிங்கம், குங்கிலியம், கந்தகம், மிருதார்சிங்கு முதலிய விஷவஸ்துக்கள் உபயோகப் படுத்தப்படுகின்றன. அவற்றுக்குப் பதிலாகப் பழைய அன்னம் உபயோகப்படுத்தப் படுகிறபடியால் அவ்வன்னம் விஷத்தன்மையுடையதேயென்பது நூல்களின் கருத்து. ஆதலால் எவ்வகையிலும் பழைய உணவை நீக்கவேண்டுமென்றே விளங்குகின்றது. அன்றியும் காயங்களை யாற்றுவதற்கும் பேதியை ஒழிப்பதற்கும் புளித்தகாடியை உபயோகிப்பது வழக்கம். சிந்தாதி முதலிய லேகியங்களிலும் புளித்தநீராகாரம் உபயோகிக்கப் படுகின்றது. பழைய சோற்றிலிட்டுப் புளித்தகாடிக்கு மதத்தையுண்டு பண்ணும் போதையுண்டு. கள்ளில்கூடப் புளித்த கஞ்சியைச் சேர்த்து வியாபாரிகள் விற்கிறார்கள். அதற்குக்காரணம் புளித்த கஞ்சிக்குக்கள்ளின் தன்மை உண்டாயிருப்பதேயாம். முதலிற் பக்குவப்படுத்தப்பட்டுப் பிறகு குளிரவைக்கப்பட்ட ஜலம் முத்தோஷங்களையும் போக்கும். அதை மறுபடியும் காய்ச்சினால் அது விஷமாய்விடும். இதனால் பெறப்படுவது யாதெனில் முதலில் ஒரு அனலில் பக்குவம் செய்யப்பட்டுக் குளிர்ந்த பதார்த்தத்தை மறுபடியும் சுடவைக்கக்கூடாது; சுடவைத்தால் அது விஷமாகிப் பல வியாதிகளை யுண்டாக்குமென்பதே. நமது தேசத்தில் இவ்விதமான துர்ச்செய்கைகள் அடிக்கடி செய்யப்படுகின்றன. பகலில் பாகம் செய்யப்பட்ட இரசம், குழம்பு முதலானவைகளை மறுபடியும் சற்றுச் சுடவைத்து உபயோகிக்கிறார்கள். முக்கியமாக வியாதிக்காரர்களுக்கே யிவ்வாறு உபயோகிக்கிறார்கள். கஞ்சிமுதலியவற்றை இரண்டாந்தரம் சுடவைத்துப் பாலர்களுக்கும் வியாதியஸ்தர்களுக்கும் கொடுக்கிறார்கள். இச்செய்கை வியாதியஸ்தர்களுக்கு வியாதியை விருத்தியாக்கிப் பாலர்களுக்கு மந்தம் முதலிய பல நோய்களை உண்டாக்கிமிகத்தீமை விளைக்குமென்பதை யுணர்த்துவதற்கேவைத்திய விதிகளை யீண்டு விரித்தோம்.

தேவபூசை நியமமுள்ளவர்கள் பூசையைச் சுருக்கமாகச் சீக்கிரம்செய்து விடவேண்டும் பிறகு புதிதாகப் பக்குவம் செய்யப்பட்டுள்ளதை மத்தியான்னத்தைவிடக் குறைவாகவே பொசிக்கவேண்டும். பொசிக்கும்போது விளக்கும் மிக்கப் பிரகாசமுடையதா யிருக்கும்படிச் செய்யவேண்டும். அஸ்தமித்து மூன்றே முக்கால் நாழிகைக்குமேல் (ஏழரைமணிக்குமேல்) ஏழரை நாழிகைக்குள் (ஒன்பது மணிக்குள்) புசிக்கவேண்டும். இன்னும் சீக்கிரமாகவும் பொசிக்கலாம். பகலைப்போல் இரண்டுவேளை மூன்றுவேளை பொசிக்கக்கூடாது. ஒரே வேளைதான் புசிக்கவேண்டும். சிற்றுண்டி உள்படப்பகலில் மூன்று வேளை நாலு வேளை பொசிப்பவர்கள்கூட இரவில் ஒரேவேளை

தான் போசிக்கிறார்கள். பகலிற் சதா போசித்துக் கொண்டிருக்கும் மிருக பட்சிகள் கூட இரவில் போசிப்பதில்லை. ஆதலால் இரவில் ஒருவேளைக்கு மேல் போசிக்கக்கூடா தென்பது கடவுளின் நியமன மென்றே கருதவேண்டி யிருக்கிறது.

பகலைப்போலவே யிரவிலும் அதிதி பூஜை செய்யவேண்டும். வானப்பிரஸ்தர், சந்நியாசி, விதவாஸ்திரீ, பிரம்மச்சாரி இவர்களுக்குச் சுக்கிலவிருத்திகுறைய வேண்டுவது அவசியமாகையால் அவர்களுக்கு இரவில் போஜனமில்லை. சுக்கில விருத்தியை அவசியம் அடையவேண்டியவர்களான கிருகஸ்தர்களுக்கே இராப்போஜனம் விதிக்கப்பட்டது. இரவும் பகலும் வேதமோதுகிற காரணத்தால் பிரம்மச்சாரியும் இரவிற் புசிக்கலாமென்று சிலர் அபிப்பிராயப்படுகிறார்கள். “கிருகஸ்தர்களும் இலகுவான உணவை மிதமாய்ப் போசிக்க வேண்டும் என்று ஜாண்டில்யர் கூறினார். “பகலில்வந்த அதிதியை விலக்குவதனால் உண்டாகும் பாபத்தைவிட இரவில் வந்த அதிதியை விலக்குவதில் எட்டுமடங்கு பாபம் அதிகமாக உண்டாகு மாதலால், இரவில்வந்த அதிதியான கிருகஸ்தனை இன்சொலால் உபசரித்து, அன்னமிட்டும், படுக்கப் பாய் முதலிய கொடுத்தும் உதவவேண்டும்” என்று புதன் கூறியருளினார்.

இரவில்வந்த அதிதியை விசேஷமாய்ப் பூஜிக்கவேண்டுமென்று விஷ்ணு புராணங் கூறியது. ஆதலால் இரவில் செய்யும் அதிதிபூசை விசேஷபலனைத் தருமென்பது விளங்குகிறது. அதனால் ஜபதப ஹோமம், போஜனம், அதிதி பூசை யிவையெல்லாம் முதல் ஜாமத்திலேயே செய்யப்படவேண்டுமென்று சௌனகர் விதித்தார். “இரவில் முதல் ஜாமத்தில் போஜனம் செய்யலாம்; ஆனால் மிதமாயும் ஜீரணமாகக் கூடியதாயுமுள்ள உணவையே போசிக்க வேண்டும்” என்று தன்வந்திரி பகவான் கூறினார்.

ஆதலால் எளிதில் ஜீரணமாகக்கூடிய உணவை மிதமாக முதல் ஜாமத்திலேயே போசித்துவிடவேண்டும். வியாதியஸ்தர்கள் ஐந்து நாழிகைக் (8-மணிக்)குள் போசிக்கவேண்டும். வைத்தியர்கள் எவ்வாறு புசிக்கவேண்டுமென்று கட்டளை யிட்டார்களோ அப்படிப்பட்ட பத்தியாகாரத்தையே வியாதியஸ்தர்கள் போசிக்க வேண்டும். வீட்டிலுள்ளோரனைவரும் முதல் ஜாமத்துக்குள்ளேயே போசிக்க வேண்டியிருப்பதால், வீட்டில் தலைமைவகித்திருக்கும் ஆடவர்கள் சீக்கிரமாகவே போசிக்கவேண்டும். இல்லாவிடிற் பரிசாரகர் ஸ்திரீகள் இவர்களுக்கு அகாலபோஜனம் சம்பவிக்கும். அதனால் உண்டாகும் கெடுதி அளவில்லாதன என்பதை ஆடவர்கள் உணர்வதில்லை. வேடிக்கை விநோதங்களிலும் வீண்வம்பு பேசுவதிலும் சோம்பேறித்தனத்திலும் நற்காலத்தைப் போக்கிவிட்டு, இரவிற் பத்து மணிக்கு மேற் போஜனம் செய்யவரும் ஆடவர்கள் அனேகருண்டு. அவர்கள் குடும்பத்தில் பலவகையான வியாதிகளுண்டாவதும் இயற்கையா யிருக்கின்றது. இதனால் வைத்தியத்திற்காகவும் இன்னம்பலவற்றுக்காவும் செல்வாகும் பணம் மிகுதியாகும். நெறிப்படி நடந்தால் குடும்பம் க்ஷேமமா யிருப்பதுந் தவிர, வைத்தியச் செலவும் சகாயமாகும் என்பதை நம்மவர் நன்குணர்ந்து கொள்வார்களாக.

இவ்விஷயத்தில் கவனிக்கத்தக்கது இது. எல்லா நரம்புக்குழல்களின் வழியாகவும் இரத்தம் ஓடிக்கொண் டிருக்கும். சூரியகிரண வெப்பத்தால் இரத்த முருகி நீர்த்தன்மையைச் சிறிது ஒத்திருப்பதினால், பகற்காலத்தில்

இரத்த ஓட்டம் தடைபடாமல் ஓடும். அதனால் உட்கருவிகளும்நரம்புகளும் இலேசாய்ச் சுறுசுறுப்புடன் வேலைசெய்யும். அப்போது ஜீரணசக்தி அதிகரிக்கும். ஆதலால் பகற்காலத்தில் உண்ட உணவு சீக்கிரம் ஜீரணமாகும். இரவிலோ மாறுபடும். சூரியகிரண வெப்பம் குறைந்து குளிர்ச்சியுண்டாகும் இரவில், பகலில் உருகிய இரத்தம் இறுகி நெய்போலத்தடித்து நிற்கும். இரத்தக் குழல்கள் சற்றுப்பருத்து முறுக்கேறும். அப்போது அவை இலேசுத் தன்மையினின்றும் நீங்கிவிடுவதால் பகற்காலத்தில் போலச் சரீரம் சுவாதீனப்படாது. அன்றியும் இரத்த ஓட்டம் குறையும். ஜீரணகாரியான பித்தமும் குறையும். கபமும் வாதமும் விருத்தியாகும். சமானன் முதலிய வாயுக்களின் ஓட்டமும் குறையும். இத்தன்மையாகச் சரீரமானது பகற்காலத்திலிருந்த நிலைமைக்கு மாறுபட்டு நிற்பதால் இரவில் ஜீரணசக்தி மிகுதியும் குறையும். இக்காரணங்களைத் தமது பேரறிவினால் கண்டறிந்த நமது முன்னோர்கள், வீடுகளிலும் சரீரத்திலும் சூரியன் வெப்பந்தங்கியிருக்கும் முன்னிரவில் வீடுகளில் விளக்கொளியால் பரவும் அக்கினி வெப்பமும் கலந்திருக்குமானால் ஜீரண சக்தி அரைவாசியாவது நிலைத்திருக்குமென்றும் அதற்கு மேற்பட்ட காலத்தில் அங்ஙனமாகாதென்றும், அக்காலத்துக்குள்ளேயே ஜீரணமாகக்கூடிய இலகு பதார்த்தங்களுடன் குறைவான போஜனத்தைச் செய்யவேண்டுமென்றும் விதித்திருக்கிறார்கள். இதற்குமாறாக நடந்தால் தீமைவிளையும். அத்தீமை உடனே வெளிப்படையாய்த் தெரியாவிட்டாலும் நாளடைவில் விருத்தியாய்ப் பிறகு பெருந்தீமை விளைவிக்குமென்பது திண்ணம். ஆதலால் இரவில் அகாலபோஜனத்தையும் பெருந்தீனி தின்பதையும் ஒழித்து வைத்தியநூல் கூறியபடி பொசித்து நோயற்ற வாழ்வும், நீடித்த ஆயுளும், அரோகதேகமும் பெற்று வாழ முயல்வதே நன்மையாமென்க. (தொடரும்)

சிவானந்தசாகர யோகீஸ்வரர்.

ஸ்திரீகள் பக்கம்

கணவனும் மனைவியும்.

ஸ்திரீகளுக்கு நற்புத்திகூறும் கிரந்தங்கள் இதுவரையில் எவ்வளவோ எழுதப்பட்டிருக்கின்றன; இனியும் எத்தனையோ எழுதப்படும்—எழுதப்படக்கூடும். இங்கு நாம் எழுதுவது இந்த விஷயத்தைப்பற்றிய பெரிய வியாசமன்று; ஆனால் முக்கியமான சில அம்சங்களை மாத்திரம் கூறுவோம்.

முதலாவது:—ஸ்திரீகள், புருஷனே தெய்வம், புருஷனே பூஷணம், புருஷனே ஆஸ்தி என்பதாக நினைத்து அவனையே கொண்டாட வேண்டும்.

2-வது:—தன்மேல் புருஷனுக்குக் கோபம் ஜனிக்காமலிருக்கும்படி அவனுடைய மனோபாவத்தைத் தெரிந்து அதற்கேற்றபடி நடந்து கொள்ள வேண்டும்.

3-வது:—கணவன் வெளியில் போய்க் களைத்து வரும்பொழுது அவனைச் சிரித்த முகத்தோடு உபசரித்து, அவனது சிரமம் நீங்கும்வரையில் இதமான வார்த்தைகளால் உரையாடிப் பிறகு குடும்ப விஷயமாக வுள்ள

வைகளையோ, அல்லது தான் ஏற்கனவே கேட்கவேண்டுமென்று கோரியிருந்த எந்த விஷயங்களையோ கேட்கவேண்டும்.

4. வது:—தன் கணவன் அவனது நண்பர்களிடத்திலோ அல்லது சுற்றத்தாரிடத்திலோ பேசிக்கொண்டிருக்கும் போது, அவர்களுக்குப்பின் புறம் மறைவாய் நின்றுகொண்டு அவர்கள் பேசுவதைக் கேட்கக்கூடாது; கூப்பிடவும் கூடாது; அப்பொழுது குழந்தைகளை அழ விடக்கூடாது. அவர்களைக் கணவனிடம் செல்ல விடக்கூடாது. தவறி அப்படிச் செய்தால் அவர்கள் சம்பாஷணைக்கு இடைஞ்சல் உண்டாகும். அப்போது குழந்தையின் பேரிலும், உன் பேரிலும் கணவனுக்குக் கோபம் உண்டாகக் கூடும்.

5. வது:—புருஷன் ஏவும் காரியங்களைச் சிரத்தை யோடும் மனப் பூர்வமாயும் செய்யவேண்டும்.

6. வது:—கணவன் வெளியிலிருந்து வரும் சமயத்தில் வீட்டுக்கதவைப் பூட்டிக் கொண்டு பக்கத்துவீட்டுக்காவது அல்லது வேறு எங்காவது போகக் கூடாது.

7. வது:—யார் எது செய்தாலும், அதைக் கணவனிடம் சொல்லி வீண் கலகத்தை யுண்டுபண்ணக் கூடாது.

8. வது:—குடும்பத்திலுண்டாகும் கோபத்தால் குழந்தைகளை அடிப்பதும், வீட்டுப் பாத்திரங்களை "திடீர், திடீர்" என்று வைப்பதும், கீழே போடுவதும், தூஷிப்பதும் கூடாது. எக் காரியத்தையும் பொறுமையுடன் செய்ய வேண்டும்.

9. வது:—கணவன் ஏதாவது காரியம் சொன்னால் அதைச் செய்வதற்குமுன், எதற்காக, யார், ஏன், என்பதாகக் கேள்விகள் கேட்கக் கூடாது.

10. வது:— கணவன் உத்தரவின்றி குடும்ப காரியங்களைத் தவிர வேறெதையும் செய்யக் கூடாது.

11. வது.—எப்போதும், யாரிடத்திலும் உரக்கப் பேசக்கூடாது.

12. வது:—புருஷனுக்குத் தெரியாமல் திருட்டுத்தனமாக யாதொரு வியாபாரமும் செய்யக் கூடாது.

13. வது:—கணவனுக்கு இனியவளாயும், மிருதுபாஷிணியாயும், கோபம் முதலிய தீயகுணங்களை நீக்கியவளாயும், நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு என்ற குணங்களை யுடையவளாயும், பிறர் வீடு செல்லாதவளாயும் இருக்கவேண்டும்.

இவைகளையும் இன்னும் இவை போன்றவைகளையும் கவனித்து நடந்தால் கணவனின் நட்புக்குப் பாத்திரமாகி, இவ்வுலக இன்பங்களையும் முடிவில் பேரின்பத்தையும் பெறலாம். சுபம்! சுபம்!!

"ஒற்றுமை யெனுங் கோடியை வளர்த்தால்,
அது இன்பமெனுங் கனிதரும்"

கே. எம். நாகராஜன், கீழவிடயல், திருச்சிரை.

ஓர் அறிவிப்பு

சந்தா நேயர்களுக்கும் இனிப் புதிதாய்ச் சந்தாவில் சேருவோர்க்கும் அறிவித்துக் கொள்வதாவது:—

முதலில் வி. பி. யில் சஞ்சிகை யனுப்பும்போது மேல்விலாசத்தின் வலது மூலேயில் கையால் எழுதப்பட்டிருக்கும் சந்தா நம்பர் நிலேயான தல்ல. வி. பி. வந்து சேர்ந்த சங்கதியைத் தெரிவிக்கும்போது மட்டுமே அந்த நம்பரைக் குறிக்க வேண்டும். பிறகு அடுத்த மாதமுதல் வரும் சஞ்சிகைகளின்மேல் எழுதப்பட்டிருக்கும் அல்லது பெயருக்குமுன் அச்சடிக்கப்பட்டிருக்கும் நம்பரே நிலேயான சந்தா நம்பராதலால், அதையே குறித்து வைத்துக்கொண்டு எப்போதும் கடிதங்களில் எழுதியனுப்பவேண்டும். முன்பண மனுப்புவோர்க்கு மட்டும் முதல் வரும் சந்தாநம்பரே நிலேயான நம்பராகையால் அவர்கள் அதையே குறித்துவைத்துக்கொள்ள வேண்டும்.

நண்பர்கள் இதையலட்சியம் செய்து விடாமல் கவனத்தில் வைத்து நடந்து கொள்வார்களாயின் அநேகம் தவறுதல்கள் நேரிடக் காரணமிராதென்று தெரிவித்துக் கொள்கிருேம்.

பத்திராதிபர்.

ஓர் வந்தனம்.

ஆனந்த போதினியின் சந்தா நேயர்களில் பெரும்பாலோர் அதனிடத்தில் மிக்க அன்புவைத்து அதன் அபிவிர்த்திக்காக எவ்வளவோ சிரமமெடுத்துக் கொள்கிருர்களென்பதும், அதற்காக நாம் மிக்க நன்றிபாராட்டக் கடமைப்பட்டிருக்கிருேமென்பதும் நாம் பன்முறை கூறியுள்ள விஷயங்களே.

ஆயினும் நமது சந்தா நேயரில் ஒருவராகிய தேவகோட்டை ம.ா-ா-ஸ்ரீ, அள-ரும- Al. Rm. அருணசலம் செட்டியாரவர்கள் தாம் உபயோகிக்கும் கடிதங்களில் நமது ஆனந்த போதினியைப் பற்றிய விளம்பரத்தை ஒருபுறம் அச்சியற்றிக்கொள்ள நம் அனுமதியைப் பெற்று, இப்போது அவ்வாறே அச்சியற்றிய கடிதம், கார்டுகளே மாதிரிக்காக நமக்கனுப்பியுள்ளார்.

இதனுல் நமது ஆனந்தனுடைய அபிவிர்த்திக்காக அவர் எடுத்துக் கொள்ளும் சிரத்தையின் அளவும், அவர் ஆனந்தனிடத்தும் தாய்ப்பாஷையினிடத்தும் வைத்திருக்கும் அன்பின் மிகுதியும் எத்தகையவென ஒருவாறு நாம் சந்தோஷத்தோடு உணரலாகும். தமிழ்த்தெய்வத்தின் அத்தகைய அன்பர்க்கு நமது நன்றியை யெவ்வாறு வெளியிடுவதென நமக்குப் புலப்படவில்லே யாதலின், பிரதமச்செயலாய் நமது ஆனந்தன் வாயிலாகவே நமது நன்றிபொருந்திய வந்தனங்களே யவருக்கு அளிக்கின்றேம். எல்லாம் வல்ல கருண சொரூபியாகிய அம்பலக்கூத்தன் அவருக்குப்பூரண அருள்புரிவானுக.

பத்திரிகாசிரியர்.

ஆத்திசூடி உதாரணக் கதைகள்

(69-வது பக்கத்தொடர்ச்சி)

"ஓதுவதொழியேல்."

"ஓதுவது=நூல்களைக்கற்பதினின்றும், ஒழியேல்=நீ நீங்காதே (அதாவது அவசியம் நூல்களைக் கற்றுக்கொள்)" என்பது இதன் பொருளாம்.

ஒரு கிராமத்தில் பொன்னன் என்னும் ஒரு சிறுவனிருந்தான். இவனுடைய தந்தை இவனைப்படிக்கச் செய்ய எவ்வளவோபிரயாசைப்பட்டும், இவனுக்குப் படிப்பதென்றால் அது எட்டிக்காயாயிருந்தது. அதனால் இவன் அக்ஷராப்பியாசஞ் செய்யுங் காலத்திலேயே பள்ளிக்கூடம் போவதற்குக் களவடித்து வந்தான். உபாத்தியாயர், "ஔவையார், 'ஓதுவதொழியேல்' என்று கூறியிருக்கின்றாள்; ஆதலின் நீ கிரமமாகப் பள்ளிக்கூடத்திற்கு வந்து கல்வி கற்றுக்கொள்" என்று இவனுக்கு எவ்வளவோ போதித்து வந்தார். அவர் இவ்வாறு போதித்தும், தகப்பனார் எவ்வளவோ கட்டாயப் படுத்தியும் சில தினங்களுக்குள் இவன் பள்ளிக்கூடத்திற்குப் போவதையே நிறுத்திவிட்டான். இவனுக்கு வயது வந்து விட்டதால் 'இனிமேல் பிள்ளை கட்டுக்கடங்கமாட்டான்' என்று இவனுடைய தந்தை இவனைக் கண்டிக்காமல் விட்டு விட்டார். அவ்வாறு விட்டுவிடவே பொன்னனுக்கு அதிக சந்தோஷமாகிவிட்டது. இவன் இரண்டெழுத்துப் பேர் கூட வாசிக்கத் தெரியாமல் மாடுமேய்க்கும் சிறுவர்களோடும், படிக்காத மூடப்பிள்ளைகளோடும்சேர்ந்து விளையாடிக்கொண்டு திரிந்தான். இவனுக்கு வயதும் பதினெட்டு ஆகிவிட்டது. இவனுடைய தந்தை "பையனுக்கு எப்படி யிருந்தாலும் வயதாகிவிட்டபடியால் கலியாணம் பண்ணித் தொலைக்கவேண்டுமே" என்று இவனுக்குப் பெண்விசாரித்தார். நெடுந்தூரத்திலுள்ள ஓர் ஊரிலிருந்த இவனுடைய பந்துக்களில் ஒரு குடும்பத்தார் இவனுடைய வடிவத்தைப் பார்த்துவிட்டு இவன் நன்றாய்ப்படித்த மாப்பிள்ளையாகவே இருப்பானென்று நினைத்து ஏமாந்து இவனுக்குத் தங்கள் பெண்ணைக் கொடுத்து விட்டார்கள். கலியாணமோ வெகு விமரிசையாக நடந்தது; பெண்ணோ நன்றாய்ப் படித்தவள். அவளும் தன் புருஷன் படித்திருப்பானென்றே நினைத்திருந்தாள். சில மாதங்கள் சென்றபின்பு பெண்ணும் மாப்பிள்ளையும், பெண்ணின் தாய் தந்தையர் வீட்டிற்குப் போய் அங்கே சில நாட்கள் தங்கி யிருந்தார்கள்.

அப்படி யிருக்கும்போது, பொன்னன் தங்கைக்குக் கலியாணம் கூடிய படியால், அதற்கு எல்லோரும் வந்து சேரவேண்டுமென்று, பொன்னன் தந்தை அவனுடைய மாமனாருக்கு ஒருகடிதம் எழுதி யிருந்தார். அக்கடிதம் சேர்ந்தசமயத்தில் பொன்னனுடைய மாமனார் வெளியே போயிருந்தபடியால், அவனுடைய மாமியார் தன் மகளைக்கூப்பிட்டு, "இந்தக் கடிதத்தை உன் புருஷனிடம் கொடுத்து வாசிக்கச்சொல்; இது உன்னுடைய மாமனாரின் ஊரிலிருந்து வந்ததாகத் தெரிகிறது" என்று அந்தக் கடிதத்தை அவள் கையில் கொடுத்தாள். அவள் வாசிக்கத் தெரிந்தவளாயிருந்தும் தாய்சொற்படி அதைக் கொண்டுபோய் கணவன் கையில் கொடுத்து "இந்தக்கடிதம் உங்கள் தகப்பனாரிடத்திலிருந்து வந்ததாகத் தெரிகிறது; இதை வாசித்து சங்கதியைச் சொல்லுங்கள்" என்று பக்கத்தில் நின்றாள். அவளுடைய தாயாரும்வந்து அவளோரமாக நின்றாள்; கடிதத்தைக் கையில்

வாங்கிய பொன்னனுக்கு அப்பொழுதுதான் 'நாம் படிக்காமற் போய்விட்டோமே'என்றகவலை அதிகரித்துவிட்டது. அவன் என்னசெய்வான்பாவம்! கடிதத்தைப் பிரித்துக் கையில் வைத்துக்கொண்டு, "ஐயோ! நாம் எப்படி இதை வாசித்துச் சொல்வது; நம்மை எல்லோரும் படித்தவனென்றே நினைத்திருக்கிறார்களே; அப்படி யிருக்க நாம் படிக்காத மூடனென்று தெரிந்தால் அதைவிட வேறு அவமானம் உண்டா? இதற்கென்னயோசனை செய்யலாம்" என்று வெட்கமும் துக்கமுமடைந்து குனிந்தபடியே நெடுநேரம் கடிதத்தைக் கூர்ந்து பார்த்துக்கொண் டிருந்தான். அவன் இருந்த இருப்பானது கடிதத்திலுள்ள விஷயத்தை ஆராய்ந்து யோசிப்பதுபோல அவனுடைய மனைவி முதலியவர்களுக்குத் தோன்றிற்று. அதனால் அவனுடைய மனைவி என்னமோ ஏதோவென்று சந்தேகித்து பொன்னனை நோக்கி, "ஏன் ஒன்றும் சொல்லாமலிருக்கிறீர்கள் என்னதான் எழுதியிருக்கிறது அதைச் சொல்லுங்கள்" என்றாள்.

அவன் என்ன சொல்லுவான்? நெடுநேரம் கடுதாசியைக் கூர்ந்துபார்த்துக் கொண்டிருந்தபடியால் கண்கள் கூசிப்போய் அவற்றினின்றும் ஜலம் வடியத் தலைப்பட்டது. பொன்னனும் அவன் மனைவியும் ஊரிலிருந்து வரும்போது பொன்னனுடைய தாயாருக்குக் கொஞ்சம் அசவுக்கியம் நேரிட்டிருந்தபடியால், அவன் கண்களிலிருந்து ஜலம் வடிந்தவுடனே அவன் மனைவி, "நம்முடைய மாமியார்தான் இறந்திருப்பாள்; அந்தவிஷயத்தைச் சொல்லமுடியாமல்தான் நமது கணவன் கண்ணீர்வடிக்கிறான்" என்று கருதி "ஐயோ! என் மாமியார் இறந்து விட்டார்களே" என்று முகத்திலடித்துக் கொண்டு அழ ஆரம்பித்தாள். பொன்னனும், "இவள் சொல்லுகிறபடி நம் தாயார் இறந்திருந்தாலும் இருக்கலாம்; அதுபற்றியே இந்தக் கடிதம் வந்திருக்கக்கூடும்; அப்படி யிருந்தால் நாமே இந்தக் கடிதத்தைப் படித்துச் சொன்னதாக ஏற்பட்டுவிடும்; ஆதலால் நாமும் கூட அழுவதே சரி; எப்படியாவது நமக்கு அவமானம் வராமலிருந்தாற் போதும்" என்று தேம்பித் தேம்பி அழுதான். இவ் விருவரும் அழுவதைப் பார்த்துவிட்டு பொன்னனுடைய மாமியாரும் அழத் தொடங்கினாள். சற்றுநேரத்திற்குள் ஊரிலுள்ள மற்ற பந்துக்களும் ஓடிவந்து பொன்னன் தாயார் இறந்துவிட்டாளென்பதை விசாரித்துக் கொண்டு பெருங்குரலிட் டழுதார்கள். அச்சங்தியைக்கேட்டு வெளியிற் சென்றிருந்த பொன்னனுடைய மாமனார் ஓடிவந்து அழுகையின் காரணத்தைத் தெரிந்து கொண்டு அவரும் துக்கித்தார். நெடுநேரம்வரை அழுகை அதிகரித்துப் பின்பு எல்லோரும் தாமே ஓய்ந்தார்கள்.

அதன் மேல் பொன்னனுடைய மாமனார், "சரி; நடந்தது நடந்துவிட்டது; இனி துக்கப்படுவதில் பிரயோசன மில்லை" என்று யாவர்களுக்கும் தேறுதல்கூறிவிட்டு, 'இறந்தது எப்போது? உத்தரகிரியை எப்போதுவைத்திருக்கிறார்கள்?' என்ற விஷயங்களைத் தெரிந்து கொள்ளும் பொருட்டு மருமகன் கையிலிருந்த கடிதத்தை வாங்கிப் படித்துப்பார்த்தார். அதில் கலியாண விஷயம் எழுதப்பட்டிருந்தது. அதைப்பார்த்தவுடனே அவர்மிகவும் வெட்கப்பட்டு "யார் இந்தக்கல்யாணக்கடிதத்தை இழவு கடிதமாக வாசித்தவர்கள்?" என்று தம் மகளையும் மனைவியையும் விசாரித்தார். அவர்கள் பொன்னன் கடுதாசியைக்கையில் வைத்துக்கொண்டு கண்ணீர்விட்டதைத் தெரிவித்தார்கள். அதன்மூலம் அவர் பொன்னன் படிக்காதவனென்று தெரிந்து கொண்டு கடிதத்திலுள்ள விஷயத்தை அங்கிருந்தவர்களுக்

குத் தெரியப்படுத்தி "படிக்காத இந்த நடைப்பிணத்திற்கு நான் பெண்ணைக் கொடுத்து விட்டேனே; அதற்காகத்தான் நாமெல்லோரும் இப்பொழுது அழுதோம்; இனி ஒருபோதும் இந்தத் தடியனுடனே நான் என் பெண்ணை அனுப்பமாட்டேன்" என்று கோபமாகப் பேசினார். பொன்னனோ, சகிக்கமுடியாத அவமானத்தை யடைந்து, "ஓதுவதொழியேல் என்று நம் உபாத்தியாயர் போதித்ததை நாம் அசட்டை செய்ததினாலல்லவா நமக்கு இவ்வித அவமானம் நேர்ந்தது; இனிமேலாவது நாம் படித்துக் கொள்ள வேண்டும்" என்று துக்கப்பட்டுக்கொண் டிருந்தான். அதை யறிந்த அவன் மனைவி பதிவிரதை யாகையால் புருஷன் மீது வெறுப்புக் கொள்ளாமல் தன் தந்தையிடத்தில், "அப்பா! எப்படியாவது நானே என் கணவனைப் படிக்கவைத்து உமக்குக் கடிதம் எழுதும்படி செய்கிறேன்" என்று அவருக்குச்சமாதானங் கூறித் தன் கணவனை அவனுடைய ஊருக்கழைத்துக்கொண்டு வந்து, தானே அவனுக்குக் கல்வி கற்றுக்கொடுத்து, அவன் தன் மாமனாருக்குத் தன்கையினாலேயே ஒருகடிதம் எழுதும்படி செய்தாள். அதன்மேல் அவருக்குத் தன்மருமகன்மேல் பிரியமுண்டாயிற்று. ஆதலின்ஒவ்வொருவரும் ஔவையார் வாக்கின்படி எப்போதும் கல்விகற்பதில் சிரத்தை யுடையவர்களா யிருக்க முயலவேண்டும்.

S. V. ஆறுமுகன்.

தேகப்பயிற்சி.

ஆண்டவனால் அளிக்கப்பட்ட மானிட சரீரத்தை யுடைய ஒவ்வொருவரும், கூடியவரையில் தங்கள் தேகசௌக்கியம் கெடாதிருக்கும்படி வைத்துக் கொள்ளுவது அவரவர்கள் கடமை யன்றோ? "நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்னும் ஆன்றோர் வாக்கியத்தை யுணராததால், தங்கள் சரீரத்தைப் பேணாமலும் அடிக்கடி வியாதிகளினால் அவஸ்தைப்பட்டும் சரீரமெலிவடைந்து கஷ்டப்படுகிறவர்கள் அனேகர். அப்படிக் கஷ்டப்படாமல் நல்ல தேகசுகத்தோ டிருப்பதற்கு ஏற்றவழிகளில் தேகப் பயிற்சி செய்ய வேண்டும். "சுவரை வைத்துக் கொண்டல்லவோ சித்திரம் எழுத வேண்டும்" என்ற வாக்கின்படி நாம் சரீர சுக போஷணையைத் தேடிக் கொள்வதை முதற் கடமையாகக் கொள்ள வேண்டும். எப்படி ஒரு யந்திரத்தைத் துரு முதலிய பிடிக்காமல் பாதுகாக்க அதை வேலையில் இயங்கும்படி செய்வது அவசியமோ, அப்படியே நம்முடைய தேகமாகிய யந்திரத்தில் கருவிகள் கெடாதிருக்கத் தேகப் பயிற்சி முக்கியமானது. அத்தேகப் பயிற்சியால் நமது தேகத்திலுள்ள துர் நீர், வியர்வைரூபமாய் எண்ணிறந்த தோற்புரைகளின் வழியாக வெளிப்பட்டு விடுவதால், உடம்பு சுத்தப் படுவதோடு, அவயவங்களை இயக்கும் தசை நார்கள் பருத்து பலமடைகின்றன. அதோடு தக்கபடி உண்பதற்குப் பசியும், உண்ட வுணவு ஜீரணமாவதற்கு சக்தியு முண்டாகின்றன. சரீர சுகம் கெட்டவர்கள் அநேக வியாதிகளுக்குள்ளாவதோடு, சிறு உழைப்புக்கும் ஆற்றாதவர்களாகித் தாங்கள் கெடுவதோடு, பிறருக்கும் உதவி யற்றவர்களாகி இம்மை மறுமை யிரண்டிலும் சுகம் பெற இயலாதவர்களாகிறார்கள். [An ounce of health is better than a ton of wealth) "ஒரு டன் நிறையுள்ள செல்வத்தைக் காட்டிலும் ஒரு அவுன்ஸ் நிறையுள்ள தேக சௌக்கியம் மேல்" என்று ஆங்கிலத்தில்

ஒரு பழமொழியுண்டு. கீழ்வரும் கதையால் தேகப் பயிற்சி செய்து வருவதால் உண்டாகும் நன்மை இப்படிப்பட்டதென்பது நன்ருய் விளங்கும்.

குருக்ஷேத்திரம் என்னும் ஊரில் லக்ஷ்மணசிங் என்னும் ஒரு அரசன் இருந்தான். அவன் தேக சவுக்கிய மில்லாமல் வெகு நாள் வருந்தி அதற்காகப் பலவித பரிகாரங்கள் செய்து பார்த்தான்; ஒன்றும் பயன்படவில்லை. கடைசியாக ஒருவைத்தியன்வந்து பின்வரும் விதமாக ஒருஉபாயம் செய்து அநுகூலப்படுத்தினுன். அஃதென்ன வென்ருல்:—

மரத்தினுல் ஒருபந்து செய்வித்து அதற்குள்ளே பலவித மருந்துகளைப் போட்டிருப்பதாகச் சொல்லி, அவை ஒன்றும் கண்ணுக்குத் தெரியாதபடி மேலே நன்ருக மூடி, அவ்விதமே பந்து அடிக்கிற கோல் ஒன்றும் செய்வித்து, அந்தப் பந்தையும் கோலையும் நோயாளியான அரசன் கையில் கொடுத்து தினந்தோறும் காலையில் உடம்பு நன்ருகவேர்க்கிறவரையில் அந்தக் கருவிகளைக் கொண்டு பந்தடித்து விளையாடி வரும்படி கட்டளையிட்டான். அரசன் அவ்விதமே செய்து வந்தான். அதுவரையிலும் உண்ட பலவகை மருந்துகளாலும் குணப்படாத அவனுடைய நோய் மிகுந்த சாமார்த்தியமுள்ள அந்த வைத்தியனது சொற்படி செய்துவந்த தேகப்பயிற்சியினுல் குணமாகி விட்டதாம்.

சகோதரர்களே! தினந்தோறும் தேகப்பயிற்சி செய்து வந்தால் நல்ல தேக சுகத்தோடும், தைரியத்தோடும், சுறுசுறுப்போடு மிருக்கலாமென்பதில் தடையில்லை. வீணே எவ்வளவோ காலத்தைப் போக்குகிருேமே. தினம் தேகப்பயிற்சிக்காக 15 நிமிஷம் செலவிடுவது அசாத்தியமானகாரியமல்லவே! ஒவ்வொருவரும் காலையில் எழுந்தவுடன் 10 அல்லது 15 நிமிஷமாவது தேகப்பயிற்சி செய்து நல்ல ஆரோக்கியத்தோடும் விசாலமான அறிவோடு மிருந்து தங்கள் தாய் நாட்டிற்குச் செய்யவேண்டிய கடமைகளைச் செய்யும்படி எல்லாம் வல்ல இறைவன் அருள்புரிவாராக.

எஸ். வெள்ளைச்சாமி நாடார், விருதுப்பட்டி.

நூல்கள்

அற்புதமான இப்பூமி கடவுள் மனதினின்றும் தோன்றினது. மனிதனுடைய எண்ணங்களோ கடவுள் சிருஷ்டித்த பிரபஞ்சத்தினின்றும் தோன்றுகின்றன. எழுத்து, சொல், நூல், ஆகிய இவைகள் மனிதன் எண்ணங்களை வெளிப்படுத்துகின்றன. சகலலோக சிருஷ்டிகர்த்தாவாகிய இறைவன் தன் மனதில் தோன்றிய எண்ணங்களை தான் படைத்த சிருஷ்டிகளினுல் தெரிவிக்கின்றவாறு, மனிதர் தம் மனதில் தோன்றும் கருத்துக்களைத் தாமியற்றும் நூல்கள்மூலமாகத் தெரிவிக்கின்றனர். பெரியோருடைய எண்ணங்கள் என்றுமழியாது நிலை நிற்பதற்கு அவர்கள் எழுதிய நூல்களைவிட வேறு சிறந்த சாதனங்கிடையாது. தம்முடையபெயர்கள் எக்காலமும் அழியாம லிருக்க வேண்டுமென்று அநேக சூழ்ச்சிகளை மனிதர் செய்திருக்கிருர்கள். அழியாதிருக்கும் என்று நினைத்துக் கல்லினுலும், உலோகங்களாலும், பிரதிமைகளைச் செய்து வைத்தார்கள். பூர்வகாலத்து சரித்திரங்களைக் கற்கோட்டை, கோயில் சுவர்களில் சிற்ப வேலையால் செய்து வைத்தார்கள். இன்னுஞ்சிலர் சித்திரவேலைகளால் தம்முடைய எண்ணங்களை நிலைநிறுத்தப்

பிரயத்தனப்பட்டார்கள். கல்லாலும், உலோகத்தாலும் செய்யப்பட்ட பிரதிமைகள், கற்கோட்டைகள், ஆலயங்களாகிய இவைகளின் ஆயுள் சில ஆயிரவருடங்களே. சித்திரங்களின் ஆயுளோ இன்னும் கொஞ்சமாம். இக் காரணத்தினாலேயே பூர்வ காலத்து சிற்பிகளின் பெயராவது, சித்திர வேலைக்காரரின் பெயராவது நமக்குக்கிடைக்காமல் மறைந்துபோயின. இக் காலத்தில் சித்திர வேலையில் கீர்த்திபெற்ற இராஜா இரவிவர்மா என்பவ ரின்பெயரும் சில நூற்றாண்டுகளுக்குள்ளே இப்படியே மறைந்து போகும் என்பதற்கு ஓரையமுமில்லை.

பூர்வகாலத்தில் உலகமெங்கும் பிரசித்திபெற்றிருந்த இராச்சியங்க ளும், நகரங்களும், கோட்டைகளும், கோயில்களும், சேனைகளும் இருந்த இடமும் தெரியாமல் மறைந்துபோயும், அவைகளைப்பற்றி இயற்றப்பட்ட காவியங்களாகிய இராமாயணம், மஹாபாரதம் முதலியவைமட்டும் இன் னும் இருப்பானேன்? சுமார் 2000 வருடங்களுக்குமுன் திருவள்ளுவநாய னார் செய்தருளிய திருக்குறளும், 1000 வருடங்களுக்குமுன் கவிச்சக்ர வர்த்தியாகிய கம்பநாட்டாழ்வார் செய்தருளிய இராமாயணமும் இன்னும் சூரியனைப்போல் பிரகாசித்து நிற்கவில்லையா? எக்காலமும் அழிவில்லை யென்று நினைக்கப்பட்ட கல்லால் செய்த சிற்ப வேலைகளும், கோட்டை களும், உலோகங்களால் செய்யப்பட்ட பிரதிமைகளும் அழிந்துபோக, சொற்ப ஆயுளுடைய ஓலைகளிலும், காகிதங்களிலும், எழுதப்பட்ட நூல்கள் அழிவில்லாமல் பிரகாசித்து நிற்பது ஆச்சரியமல்லவா? இதற்குக் காரணம் யாது? பிரதிமைகளையாவது சித்திர வேலைகளையாவது முதலில் ஆக்கினோர் செய்ததைப்போல் மறுபடியும் வேறொருவர் செய்வது கஷ்டம். ஆகவே அவர்கள் செய்த வஸ்துக்கள் அழியும்போது அவர்களுடைய கருத்துக்க ளும் மறைந்துபோகின்றன. சான்றோர் எழுதிய மூல நூல்களைப்போலவே நூற்றுக்கணக்காக, ஓலைச்சுவடிகளில் மற்றவர் எழுதக்கூடும். அச்சுப்புத்த கங்களோ ஆயிரக்கணக்காகவும் இலக்ஷக்கணக்காகவும் சுலபமாக அச்சிடக் கூடும். அச்சுப்பதிப்பும், அச்சுஇயந்திரமும் எற்பட்டபிறகு நூல்கள்இலக்ஷக் கணக்காக அச்சிடப்படுகின்றன. எளியவரும் அரும்பெரிய நூல்களாகிய திருக்குறள், நாலடியார், கம்பராமாயணம் முதலிய நூல்களைப் படிக்க ஆரம் பித்தார்கள். முற்காலத்தில் ஓலைச்சுவடி எழுதுவது கஷ்டமாதலால் படித் தவர்கள் மிகச் சிலரே. இக்காலத்திலோ புத்தகங்கள் இலக்ஷக்கணக்காக அச்சு இயந்திரத்தினால் பதிக்கப்படுகின்றனவாதலால். எளியவரும் மிகக் குறைந்த விலைக்கு அரும்பெரிய நூல்களை வாங்கி வாசிக்கலாயினர்.

நமது காலத்திலேயே நமதுநாட்டிலேயே பிறந்து நமது நாட்டிலேயே வசிக்கும் ரபீன்ட்ரநாத் டாகூர் என்னும் கவிராயரை நம்மவரில் எத்தனை பேர் பார்த்து அவருடைய கவிகளை அவர்வாக்கினின்றும் கேட்கவும் அவா வுள்ளவர்களாயிருக்கிறோம். அவரை அநேக காரணங்களால் பார்க்க முடி யாதவர்கள் எல்லாம் ஆவலுடன் அவரியற்றிய கீதாஞ்சலி முதலிய அருமை யான நூல்களை அப்போதேவாங்கி வாசித்துக் களிப்படையவில்லையா? இக் காலத்து இந்நாட்டுச்சான்றோருடையநூல்கள் மாத்திரமல்லாமல், எக்காலத் திலும் எத்தேசத்திலுமுள்ள பெரியோர்கள் செய்த நூல்களையும் எவரும் எளிதில் கற்கச்செய்வது அச்சு இயந்திரமல்லவா?

இத்தகைய புத்தகங்களை வாசிப்பதனால் நாமடையும் பயன்களும் இன் பங்களும் அளவிறந்தன. புத்தகங்களால் நாமடையும் நன்மைகளை நம்மு

டைய சிறந்த சிநேகிதர்களாலும் நாமடைய முடியாது. "ஒருவன் அன்னியர் போதனையில் மட்டும் கற்ற கல்வியைக் காட்டிலும் தானே கற்ற கல்வியே மிகச்சிறந்தபாகம்" என்று ஆன்றோர் கூறியுளர். இலக்கிய இலக்கணங்களிலும் இதரசாஸ்திரங்களிலும் கீர்த்திபெற்ற எல்லோரும் தற்பயிற்சியுடையவர்களாகவே காணப்படுகிறார்கள். நம்மில் அனேகர் பள்ளிக்கூடத்தையும் சர்வகலாசாலையையும் விட்டுவிட்டதே படிப்பு முடிந்துவிட்டதாக நினைத்துப் படிப்பதை அடியோடு விட்டுவிடுகிறார்கள். நாம் பள்ளிக்கூடத்தில் படித்த படிப்பெல்லாம் கல்வியின் ஆரம்பமேயாம். அப்பொழுது படிப்பதெல்லாம் பரீக்ஷையில் தேருவதற்காகவே படிப்பது. பள்ளிக்கூடத்தை விட்டுவிட்டபிறகும் படிப்பை அபிவிர்த்தி செய்யாவிடின் கல்வியினாலடையும் பயன்களை நாமடையமாட்டோம். "ஓதாமலொருநாளு மிருக்கவேண்டாம்" என்று ஒளவையார் சொன்னது இதன் பொருட்டன்றோ?

உலகத்திலுள்ள நூல்கள் ஆற்றுமணல் போல் எண்ணிறந்தனவாயிருப்பதாலும், நம்முடையகாலம் மிகச்சிறியதா யிருப்பதாலும், நாம் சாவகாசமா யிருக்கும்போது காலத்தை வீணாகக்கழிக்காமல் நம்முடைய தொழிலுக்கும் நம்முடைய மனநோக்கத்திற்கும் தக்கவாறு நூல்களில் நமக்கு வேண்டியவைகளைத் தேர்ந்தெடுத்துக் கல்வியை விர்த்திசெய்ய வேண்டும்.

"அறம்பொரு ளின்பமும் வீடும் பயக்கும்
புறங்கடை நல்லிசையு நாட்டும்—உறுங்கவலொன்
றுற்றுழியுங் கைகொடுக்குங் கல்வியி னூங்கில்லை
சிற்றுயிர்க் குற்ற துணை."

என்னும் செய்யுளால் சிவப்பிரகாச சுவாமிகள் கல்வியினாலடையும் பயன்களை வெளியிட்டிருக்கிறார்.

V. B. துரைசாமி முதலியார். B. A., சென்னை.

வைத்தியக் குறிப்பு.

(75-ம் பக்கத்தொடர்ச்சி)

சௌசம் என்பதைப்பற்றி ஒருவாறாக எழுதினோம். இனி ஆசமநீயம் என்பதின் அனுஷ்டானத்தையும் அதன் உபயோகத்தையும் சிறிதளவு விவகரிப்போமாக: ஆசமநீயம் என்னும் விதியானது மந்திர உச்சாடனத்துடன் ஒவ்வொரு உத்தரணி சலம் சாப்பிடல் என்பது சகலரும் உணர்ந்த விஷயமே. ஆனால் இதன் அந்தரங்கக் கருத்தென்ன வென்றால், ஒவ்வொரு உத்தரணி சலம் உட்கொள்ளும் போதும் கிரமமாய் மந்திரோச்சாடனம் செய்யும்படி சொல்லி யிருக்கின்றது. அவ் வுச்சாடனங்களால் மோக்ஷம் எனச்சகலரும் நினைத்திருப்பது சுபாவமாயிருந்தாலும் உள்நோக்கிப் பார்க்கும்போது அதில் அநேக இரகசியங்கள் அமைக்கப்பட் டிருப்பதாய்த் தெரிகின்றன. முதலில் பகவன்னாம உச்சாடனத்தால் மோட்சசாதனமென்றாலும் அந்நாமமுடைய மூர்த்தியை ஒவ்வோர் ஸ்தானங்களுக்கும் நியமனம் செய்து அவ்வத் தானங்களை இரக்ஷிக்கும்படி அப்பகவானை வேண்டிக்கொள்வதா யிருந்தாலும், முக்கியமாய் உத்தரணி சலத்தோடு

மந்திர உச்சாடனத்துக்குக் காரணம் யாதெனில், மந்திரத்தின் முதல் அர்த்தத்தால் அம்மந்திரமானது நாவின் கண்ணுள்ள அதிதேவதையைத் தூண்டி அந்த ஸ்தானத்தில் நான் உட்கொள்ளும் சலமானது நாவின் சகல தோஷங்களையும் நிவர்த்தித்து என்னை இரக்ஷிக்க வேண்டுமென்று துதிப்பதே கருத்தாம். இரண்டாவது மந்திரத்தால் கண்ட ஸ்தானத்தையும் அதின் அதிதேவதையையும் குறித்து தியானித்து ஒரு உத்தரணி சலம் சாப்பிடுதல்; மூன்றாவது மந்திரத்தால் இருதய ஸ்தானத்தையும் அதின் அதி தேவதையையும் தியானித்து ஒரு உத்தரணி சலம் சாப்பிடுதல்; நான்காவது நாபிஸ்தானத்தைக் குறித்து அதின் அதிதேவதையைத் தியானித்து ஒரு உத்தரணி சலம் சாப்பிடுதல். ஐந்தாவது மந்திரத்தால் கபாடஸ்தானத்தைக் குறித்து அதின் அதிதேவதையைத் தியானித்து ஒரு உத்தரணி சலம் சாப்பிடல். ஆகிய இச்சடங்குகளால் தெரிந்து கொள்வது என்னவென்றால், நாம் உட்கொள்ளும் உத்தரணி சலமானது நாவு முதல் கபாடம் வரையில் கிரமேணுய்க் குளிரச்செய்து அந்தஸ்தானங்களைப் பரிசுத்தப் படுத்தி அவற்றின் சகல தோஷங்களையும் நிவர்த்திக்கின்றது. இம்முறையானது மனோசக்தியுடன் சலஸ்பரிசத்தால் சகல வியாதிகளையும் நிவர்த்திக்கும் என்பது நம் முன்னோர்களின் தீர்மானமாய் இருக்கின்றது. ஆனால் மேல்நாட்டாரும் இம்முறையை வேறு விதமாய்க் கண்டு பிடித்திருக்கின்றார்கள். அம்முறையாவது, லண்டன்மாநகரில் ஜனித்தமேதாவியாகிய டாக்டர் அபபல்லோ என்பவர் தம் ஆயுள் நாட்களில் 60 வருஷம் கஷ்டப்பட்டு தனது விடாமுயற்சியால் ஒரு வித சிகிச்சை கண்டு பிடித்ததாய்ச் சொல்லப்படுகின்றது' அச்சிகிச்சையானது கொஞ்சம் கொஞ்சமாக சலம் அருந்தல் என்பதாம். அவர் கூறிய சாஸ்திரத்தில் அதி காலையில் எழுந்து கொஞ்சம் கொஞ்சமாக அதாவது (சிறு சிறு அளவாக) டம்ளர் சலம் சாப்பிட்டால் அச் சலமானது ஒவ்வொரு அவயங்களிலும் சென்று அந்தந்த அவயவத்தைப் பரிசுத்தம் செய்வதாய்ச் சொல்லியிருக்கிறது. இம்முறையை அனுஷ்டிப்பதால் மலச் சிக்கல், நீர்வியாதி, மூத்திர ரோகங்கள், அசீரண வியாதிகள், இருதய வியாதிகள், மலப்பையைப் பற்றிய நோய்கள், சீரணப்பை பித்தப்பை தீனிப்பை கபாட சம்பந்தமான வியாதிகள், முதலியயாவும் நிவர்த்தியாகுமென்றும், அப்படி நிவர்த்திக்கும் மார்க்கங்களையும் அதற்கு அநேக யுக்திகளையும் அவர் விஸ்தாரமாய் எழுதியிருக்கிறார். ஆனால் அவர் கண்டு பிடித்திருப்பதைவிட நம் தேசத்தில் வழங்கி வருவது நூறு மடங்கு சிலாக்கியமென்றே சொல்லலாம். அன்னவரின் விதிப்படி அளவில்லாமலும் மிதமில்லாமலும் உட் கொள்ளும் சலம் எந்த ஸ்தானம் வரையில் செல்லுகின்றதென்ற நிர்ணயம் இல்லாமல் மனோநிலைமையைக் கருதாது செய்யும் சிகிச்சையானபடியால், நம் நாட்டு ஆசமன்னிய விதிகளே சிலாக்கியமானவை என்று விளங்குகின்றன. உட்கொள்ளும் சலமானது செல்லும் இடத்தில் மனதும் செல்லும்படி அந்த ஸ்தானங்களில் ஒரு தேவதையை நியமனம் செய்து வியாதியின் நிவர்த்தியோடு பந்த நிவர்த்திக்கேதுவாகிய மோக்ஷ சாதனத்தையும் உள்ளடக்கித் தாம் கண்டுபிடித்த இம்மார்க்கத்தை நமது முன்னோர்கள் சகலரும் அனுஷ்டிக்கும்படி ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இனி ஸ்நாநம் செய்வதின் பலனையும் பிராணாயாமத்தின் அவசியத்தையும் கூறுவோம். (தொடரும்)

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார்.

கற்கோட்டை—நாவல்

(79-ம் பக்கத்தொடர்ச்சி)

பிரபு தட்டென்று எழுந்து நின்று "ஒருவார்த்தை; விவகாரங்கள் திடீரென்று மாறுதலடைந்தது மிக்க திருப்திகரமான விஷயமே; ஆயினும் விவகார ஒழுங்கிற்காவது கண்ணபிரான்பிரபு இதையேன் முன்னமே காட்டவில்லையென்று கேட்கவேண்டுமல்லவா?" என்றார்.

இம்மொழிகளைக்கேட்ட ஸர்தார் "பிரபுவே, இப்போது இராணியின் கட்டளைப்படி நான் இவரை விடுதலை செய்யவேண்டும். இந்தவேலைக்குத் தாங்களே ஆலசியத்தை யுண்டாக்குவது மிக்க வியப்பாயிருக்கிறது" என்றார்.

பிரபு.—"இதென்ன! இப்பத்திரம் ஏப்ரல்மாதம் 20-ம் தேதி தான் எழுதப்பட்டிருக்கிறது. கண்ணபிரான் அதற்கு மூன்று தினங்களுக்கு முன்பே இங்கு சிறைப்பட்டிருக்கிறானே" என்றார்.

ஸர்தார்.— தாங்கள் கூறுவதாலேயே இப்பத்திரம் சமீபகாலத்தில்தான் கண்ணபிரான் பிரபுவின் கைக்கு எட்டியதென்றும், அதனாலேதான் அவர் இதை முன்னமே காட்டக்கூடவில்லை யென்றும் தெரிகிறது. மேலும் இராணி மணவாளன் மூலமாகக் கூறி யனுப்பிய கட்டளையில் சட்டப்படி நடக்கவேண்டுமென்பதோடு 'சந்தர்ப்பத்தை யனுசரித்து' என்றும் கூறப்பட்டது. அது என்ன வென்பது எனக்குச் சந்தேகமாகவே யிருந்தது. இப்போது அதுவிளங்கிவிட்டது. இவனிடம் சொல்லியனுப்புவதன் முன்பே யிக்கட்டளையைப் பிறப்பித்திருக்கிறார்கள். இதுதான் சந்தர்ப்பம். இராஜவிசுவாசமுடைய நான் இராணியின் கட்டளைப்படி நடக்க வேண்டியவன் ஆகையால் .." என்றபோது,

சுந்தரநாயகம் பிரபு.—"என் நடக்கையைப்பற்றி யார் எப்படி நினைத்தாலும் நினைத்துக் கொள்ளட்டும். என்சுற்றத்தானுடைய பிராணனுக்கே ஆபத்து நேர்வதாயினும் நீதி சரியாய் நடத்தப்படவேண்டு மென்பதே யென்கருத்து!" என்றார்.

கரும்பூர்மேயர்.—"பேஷ்! தங்கள் அபிப்பிராயம் மெச்சத் தகுந்ததே. ஆயினும் பிரஸ்தாபவிஷயத்தில் வழி மிக்க தெளிவாகவே யிருக்கிறது."

பிரபு.—"ஆனால் அந்த மனிதன் இக்கடிதத்தைக் கண்டவுடனே இது இத்தகையதென எப்படித்தெரிந்துக்கொண்டான்? அதோடு இது தன்னுடையதென்று எப்படிச் சாதிப்பான்? இதில் ஏதோ மர்மமிருப்பதாகத் தெரிகிறதல்லவா. இது சூக்ஷ்மபுத்தியுள்ள ஸர்தார் அவர்களுக்குப் புலப்படாமற் போனது வியப்பே" என்றார்.

ஸர்தார் தம்மால் கூடியவரையில் வாதித்துப் பார்த்தும் பிரபு நீதியை நிலைநிறுத்தப் பாடுபடுபவர்போலவே, முன்னாடி அக்கடிதம் கள்ளனுடையதா என்பதைத் தீரவிசாரிக்கவேண்டும் என்று வாதித்தார். அங்கிருந்த நகரசங்கத்தைச் சேர்ந்த ஒருவன் இச்சமயம் பிரபுவிற்கு உடந்தையாய்ப் பேசினால் தனக்கு அனுகூலமுண்டாகுமென்பதை யுணர்ந்து "ஆம், முன்னாடி அதை விசாரிப்பதே நலம். அப்படி அக்கள்ளன் கூறுவது பொய்யாயின், விசாரணையில் பிறகு அவனே யது பொய்யென்று ஒப்புக்கொள்வான். ஒரு சமயம் எந்தக் காரணத்தாலோ அக்கடிதம் அவனுக்களிக்கப்பட்டதாகவேயிருந்து, நாம் அதன் பயனை யிந்தக் கண்ணபிரான் பிரபுவிற்களி

த்து இவரை விடுதலைசெய்துவிட்டு, பிறகு அவனைக் கடற்கொள்ளைக்கார
னென்று மரண தண்டனைக்குள்ளாக்கிவிட்டால், பெரிய குற்றம் சபையார்
மேற் சாரும். மேலும் இக்கடிதத்தில் ஒருவர் பெயரும் குறிக்கப்படாத
வரையில் இது உண்மையாய் யாருடையதென்பதைத் தீரவிசாரித்தறிந்த
பிறகே யிதன் பயனை யொருவர்க்களிக்கலாகும். ஆகையால் இந்த விசா
ரணையைச் சற்றுநிறுத்தி, முன்னே கள்ளனை விசாரிப்பதுதான் ஒழுங்
கென்று நானும் அபிப்பிராயப்படுகிறேன்'' என்றான்.

ஸர்தார் அதற்குமேல் ஒன்றும் சொல்வதற்கில்லை. அந்தக் கள்ளனுக்
கும் இந்தப்பத்திரத்திற்கும் ஒரு சம்பந்தமு மிராதென்றே அவர் எண்ணி
யிருந்தார். ஆதலால் கண்ணபிரானைச் சற்றுநேரம் வேறு அறையில் கொ
ண்டுபோய் வைத்திருக்கும் படிக்கும், பலராமனை யழைத்து வரும்படிக்கும்
கட்டளை யிட்டார். அவ்வாறே காவலர் கண்ணபிரானை யழைத்துச் சென்
றதே, ஸர்தார் ஒரு சிறுகடிதத்தில் ஏதோ வெழுதித் தன் அந்தரங்க ஆளி
டம்கொடுத்து தன் தங்கைக் கனுப்பினார்.

மறுநிமிடம் பலராமன் நியாயசபைமுன் கொண்டுவந்து நிறுத்தப்பட்
டான். ஸர்தார் அந்தக் கடிதம் உன்னுடையதென்பதற்கு என்ன அத்தாட்சி
என்று கேட்டபோது, அவன் அக்கடிதத்தி லெழுதப்பட்டுள்ள விஷயங்
களை மனப்பாடமாய்க் கூறியதோடு, கண்ணபிரான் பிரபுவைப் பிடித்துக்
கொடுப்பதாய் தான் இராணிக்கு வாக்களித்ததையும் அதற்காக இராணி
தன் பாதுகாப்பிற்காக அந்தப் பத்திரத்தை யளித்ததும், திரவியசிங்கம்
பிரபு சிறையாக்கப்பட்டதுமுதலிய கற்கோட்டையில் நடந்த சம்பவங்களை
யும் யாவும் சவிஸ்தாரமாய்க் கூறினான். இவற்றைக்கேட்டதே ஸர்தார்
மனங்குன்றிவிட்டார். சுந்தரநாயகம் பிரபுவிற்கோ மனப்பூரிப்பும் உற்சா
கமு முண்டாய்விட்டது. ஸர்தார் பலராமன் கடற்கொள்ளைக்காரன் என்று
ருசுப்படுத்துவதற்காக கமலாம்பாளை யழைத்துவரும்படி முன்பு தன் தங்
கைக் கனுப்பிய சீட்டில் எழுதியிருந்தபடியால் அச்சமயம் கமலாம்பாளும்
இரத்னம்மாளும் சபைக்குள் வந்தார்கள்.

கமலாம்பாள் யாரென் றறிந்ததே யாவர்க்கும் வியப்பும் இரக்கமு
முண்டாயிற்று. ஸர்தார், நாம் என் இவளைவரும்படிச் செய்தோமென்று
மனவருத்த மடைந்தார். விசாரணையில் கமலாம்பாள் தானே அக்கடிதத்
தைக் கண்ணபிரானிடம் அனுப்பியதாய் ஒப்புக்கொள்ள வேண்டிய
தாயிற்று. ஆகையால் அப்பத்திரம் பலராமனிட மளிக்கப்பட்டு அவன் விடு
தலையடைந்தான். ஆனால் விடுதலை செய்யும்முன் ஸர்தார் கேட்ட கேள்
விக்கு விடையாக "கமலாம்பாள் நான்கு நாள் என்கப்பலில் சிறைப்பட்
டிருந்தாலும் அவளுடைய கற்பிற்கு எள்ளளவும் பங்கம்நேரிடவில்லை''
என்று பிரமாணமாய்க் கூறினான். விடுதலையடைந்ததே அவன் கட்டிடத்
தை விட்டுப் போய்விடாமல் அறைக்கு வெளியிலிருந்த ஜனக்கூட்டத்தில்
கலந்துகொண்டு, சபையில்நடக்கும் விவகாரங்களைக் கவனித்துக் கொண்
டிருந்தான்.

இனி கண்ணபிரானைக் காப்பாற்ற ஒருவழியுமில்லை. மரண தண்டனை
விதித்தே தீரவேண்டு மாதலால் கமலாம்பாள் எதிரில் இருப்பது தகுதியல்
லவென்று அவளை யழைத்துக்கொண்டு போய்விடும்படி ஸர்தார் தம் தங்
கைக்குக் கூறினார். கமலாம்பாளுடைய மனோநிலைமை யிவ்வாறிருந்த
தென்று நாம் கூறவேண்டியதில்லை. அவள் கண்களிலிருந்து ஜலம் தாரை
தாரையாய் வடிந்தது. இரத்தினம்மாள் அவளைத் தன் அறைக்கு அழைத்

துக்கொண்டுபோய், கண்ணபிரானுடைய உயிருக்கு அபாய மில்லையென்று சொல்லமுடியாதேனும், தன்னாலியன்றவரை தேறுதல் கூறிக்கொண்டிருந்தாள்.

கண்ணபிரான் மறுபடியும் நியாயாதிபதிமுன் கொண்டு வந்து நிறுத்தப்பட்டபோது, அவன் தைரியத்தோடும் மனோநிம்மதியோடும் சாந்தமாய் நின்றான். ஏனெனில் உண்மையில் அவன் நிரபராதியாகையால் கடவுளிடத்தில் பூரண நம்பிக்கை வைத்திருந்தான். ஸர்தார் அவனை நோக்கி, "பிரபுவே! தங்கள்மேல் ருசுவாக்கப்பட்ட குற்றத்திற்காகத் தங்களை 24-மணிநேரத்திற்குள் என் மரணதண்டனைக்குள்ளாக்கலாகாது என்பதற்கு ஏதேனும் காரணமாய்க் காட்டக் கூடுமோ வென்று மறுபடி கேட்கிறேன்" என்றார். கண்ணபிரான் "திடீரென்று கேட்கிறீர்களே. அக்கள்ளன் விசாரணை யெவ்வாறு முடிந்ததோ?" என்றான். ஸர்தார் "பிரபுவே! அக்கடிதம் தங்களுக்குப் பயனற்றதாய் முடிந்தது. அதைப்பற்றிய விவரத்தைக் கூறுவது அனாவசியம். தாங்கள் வேறு காரணம் காட்டினாலன்றி தங்களைக் காப்பாற்ற நான் அசக்தனாயிருக்கிறேன்" என்றார். கண்ணபிரான் "வேறு ஒரு காரணமுமில்லை" என்றான்.

ஸர்தார் துயரத்தோடு சட்டப்படி தீர்மானம் கூறிக் கொண்டேவந்து முடிவில் "நாளை காலை பதினொருமணிக்கு நீ சிரச் சேதம் செய்யப்பட வேண்டும் என்று தீர்ப்பளிக்கிறேன்" என்று கூறத்தொடங்குகையில் கதவு படீரென்று திறக்கப்பட்டதும் இரண்டுபேர் அதிவேகமாய் உள்ளே பிரவேசித்தார்கள். நடவடிக்கை தட்டென்று நிறுத்தப்பட்டது.

27-வது அத்தியாயம்.

விதிக்கப்படும் மரணதண்டனை யெவ்வாறு முடிகிறதென்பதைக் கவனிப்பதன்முன் கமலாம்பாளும் இரத்தினம்மாளும் இருக்கும் அறைக்குள் என்ன நடக்கிறதென்று பார்ப்போம். கமலாம்பாள் விஷயம் தெரிந்தவளானதால் கண்ணபிரான் மரணதண்டனை யடைவது நிச்சயம் என்று உணர்ந்துகொண்டாள். தன்னால் கூடியவரையில் யோசித்துப்பார்த்தும் அவனைக் காப்பாற்ற ஒரு மார்க்கமும் புலப்படவில்லை. அவள் கற்புடையவளாதலால் 'கண்ணபிரானை நாம் இன்னும் மணம்புரியவில்லையே, அவனைப்பற்றி இன்னும் நாம் என் கவலைப்படவேண்டும், நம் தந்தைக்குத் திரண்ட செல்வமிருக்கிறது, இவனைப்போன்ற வேறு செல்வப்பிரபுக்கள் எத்தனையோ பேர் நம்மை மணம்புரிய ஆவல் கொள்வார்கள்" என்று இவ்விதமான சிந்தனையில் அவள் மனம் செல்லவேயில்லை. கண்ணபிரான் இறந்தால் தன் உலகவாழ்க்கையே அடியோடு போய்விடுவதுபோல் அவள் மனதிற்குத் தோன்றியது. அவன் உயிருக்காகத் தன் பிராணனை யளிக்க வேண்டு மென்றால், ஆனந்தத்தோடு அந்த விநாடியில் கொடுத்து விடுவாள். அவளுடைய காதல் பரிசுத்தமான காதலாகையால், மனதில் கண்ணபிரான்மேல் காதல் கொண்டவரையில் இனி அவன் ஒருவனே இவ்வுலகில் நமக்குக் கணவன் என்று கருதிவிட்டாள். கடைசியில் "நம்மால் வேறெவ்வித வுதவியும் செய்யமுடியவில்லையே, அவன் முக தரிசனத்தைக் கண்டு நம்மால் கூடிய தேறுதலாவது இயம்புவோம், இவ்வுலகில் இனியொருதரமாவது இருவர் மனமும் ஒருமனமாய் ஆண்டவனைத் துதிப்போம். ஒரு சமயம் அவனேயாவது தான் தப்பித்துக்கொள்ள நாம் செய்யத் தகுந்தது ஏதேனு மிருக்கிறதென்று கூறினாலும் கூறக் கூடும்" என்று சிந்தித்து

இரத்தினம்மாளை நோக்கி, "அம்மா, எனக்கு ஒரேயொரு வர மளிக்கவேண்டும். என் காதலரைக் காப்பாற்றத் தாங்களும் தங்கள் தமையனாரும் எவ்வளவோ அன்போடும் சிரத்தையோடும் சிரம மெடுத்துக் கொண்டீர்கள். வினைப்பயனால் அது நிறைவேறாவிடினும் அதற்காக நாங்க ளிருவரும் கொண்டிருக்கவேண்டிய நன்றியில் சற்றும் குறையக் காரணமில்லை. எத்தனப் பிரயத்தனம் செய்ய வேண்டியது மனிதன். முடிவிற்கு அவன் பொறுப்பாளி யல்ல. நன்மையான முடிவாயினும் தீமையான முடிவாயினும் அதற்குக் காரணன் அந்த ஸர்வகாரணகர்த்தாவாகிய ஆண்டவன் ஒருவனே" என்றாள்.

இரத்தினம்மாள் மனங்கரைந்து, "குழந்தாய்! என்னால் உனக்காக வேண்டிய உதவி யெதுவாயினும் நான் செய்யச் சித்தமா யிருக்கிறேன். உனக்கு என்ன வேண்டும் கூறு" என்றாள். கமலாம்பாள் அதன்மேல் தான் கண்ணபிரானைக் காணவேண்டும் என்று கூறியதே, அம்மாது, "ஆகா, தடையின்றி காணச்செய்கிறேன். உனக்கு அந்த அனுமதி யளிக்க என் தமையனாருக்கு அதிகாரமுண்டு. அவர் ஒருபோதும் உன் விஷயத்தில் தடைகூறார். இதோ சீக்கிரம் தெரிந்து கொண்டு வருகிறேன்" என்று கூறி அறையை விட்டுப் புறப்பட்டாள்.

கமலாம்பாள் இங்கிருப்பது கண்ணபிரானுக்குத் தெரியாது. தெரிந்தால் அவனுடைய மனோவியாகுலம் அதிகமாகுமென்று ஸர்தார் அவனுக்கு அதை யறிவிக்கவில்லை. ஆகையால் கற்கோட்டையில் நடந்த சம்பவங்களும் பலராமன் அங்குவர நேர்ந்த காரணங்களும், ஒன்றும் அவனுக்குத் தெரியாது. இரத்தினம்மாள் நியாயசபையருகில் வரும்போது ஸர்தார் தீர்ப்புகூறிக்கொண்டிருந்ததால், இப்போது நாம் உள்ளே செல்வது சரியல்லவென்று வெளியில் நின்றுகொண் டிருந்தாள்.

இரத்தினம்மாள் சென்றபின் கமலாம்பாள் துயரக்கடலில் ஆழ்ந்தவளாய்க் கடவுளைத் துதித்துக்கொண் டிருந்தாள். இரண்டொரு நிமிடங்களில் அவளிருக்கும் அறையின் கதவு திறக்கப்படுவதைக்கண்டு கலவரத்தால் கண்ணபிரானே விடுதலையடைந்து நம்மை நோக்கி வருகிறானோ வென்று திடுக்கிட் டெழுந்தாள். ஆனால் உள்ளே வந்தவன் பலராமன் என்று கண்டதே, முதலில் திகிலடைந்து கூச்சலிட நினைத்தாள். மறுபடி யுடனே மனதைத் தைரியப் படுத்திக் கொண்டு அவனை நோக்கி,

"அடே கள்ளப்பயலே. என் எதிரில் மறுபடிவர உனக்கு இவ்வளவு தைரியமா!" என்று கோபத்தோடு வினவினாள்.

பலராமன்—" அவசரப்படாதே. ஒரே வார்த்தை கூறுகிறேன் கேள். கண்ணபிரான் மரணதண்டனை யடையும்படி தீர்ப்பு கூறிக்கொண் டிருக்கிறார்கள். ஸர்தார் 24-மணிநேரம் காலதாமச மளிக்கலாம். அவர் அவசியமளிப்பார். அதாவது, நாளை சுமார் 10-மணிக்கு மேல்தான் தண்டனை நிறைவேற்றப்படும். இந்த இரவுதான் மத்தியிலிருக்கிறது. நான் பிரியப்பட்டால் உன் காதலனைச் சிறைச்சாலையிலிருந்து வெளிப் படுத்திவிடுவேன்" என்றான்.

இம்மொழிகளைக்கேட்டதே கமலாம்பாளுக்கு வியப்பும் சந்தோஷமு முண்டாய்விட்டது. "நீயா காப்பாற்றுவாய்? அத்தனை காவலர் இருக்க சிறைச்சாலையி லிருந்து மீட்டுவிடுவாயா? அதுவும் இன்றிரவே" என்றாள்

பலராமன்.—"ஆகா! அது எத்தனை மதில் சுவர்களால் சூழப்பட்டதா யிருந்தாலும்சரி. எத்தனை காவலிருந்தாலும்சரி, நான்மீட்டுக்கொண்டு வந்துவிடுகிறே னென்று பிரதிக்கினையாய்க் கூறுகிறேன்" என்றான்.

கமலாம்பாள் "செய் அகத்தியம் செய். நீ யெனக்குச்செய்த கெடுதிகளுக்கும், உண்டாக்கிய துயரத்திற்கும் இந்த ஒரு உபகாரம்செய்தால் போதும்" என்றாள்.

பலராமன்.— இல்லையில்லை. அப்படியல்ல. நீ உயிருக்குயிராய்க்கருதும் உன்காதலனைப் பிராணபத்திலிருந்து தப்பவைத்தால் அதற்காகஎதை வேண்டுமாயினும் கொடுப்பாயல்லவா?

கமலாம்பாள்.—ஆ தெரிந்துகொண்டேன். உனக்கு எவ்வளவு பணம் வேண்டுமாயினும் கொடுக்கிறேன்.

பலராமன்.—"சேசே! தப்பு அர்த்தம் வேண்டாம். ஒரு நிபந்தனை யிருக்கிறது. அதன்படி நடப்பதாய் ஒப்புக்கொண்டால்தான் கண்ணபிரானைத் தப்ப வைப்பேன். அதாவது இன்றிரவு நான் கண்ணபிரானை விடுதலை செய்துவிட்டால், அதை நிச்சயமென்று தெரிந்துகொண்டபின் நீ என் மனைவியாவதாய்ச் சத்தியம் செய்யவேண்டும். உன்வார்த்தையை நம்புவேன்" என்றான்.

இம்மொழிகளைக்கேட்ட கமலாம்பாள் ஆவிசோர்ந்தாள். "அடப்படு பாவி. இன்னுமா என்னை மனைவியாக்கப் பார்க்கிறாய்......" என்றாள்.

பலராமன்.—"என்னைத் தூஷிப்பதில் பயனில்லை. உனக்குப் பிரியமிருந்தால் செய், இன்றேல் தள்ளிவிடு. இந்நேரம் தீர்ப்புகூறி முடிந்திருக்கும். நேரமாகிறது. நான் போய்விட வேண்டும். இப்போது முதல் பிரயத்தனப் பட்டால்தான் இராத்திரிக்குக் கண்ணபிரானை மீட்கமுடியும். சீக்கிரம் கூறிவிடு" என்றான்.

கமலாம்பாள் "ஐயோ கடவுளே! அனாதரட்சகனே! இச்சமயம் எனக்கு எவ்வித உதவியுமில்லையே. அந்தோ! என் காதலனை யிழந்து என் உயிரை வைத்துக்கொண்டு எப்படி யிருப்பேன். அந்தோ இப்பாதகனே தகாத மொழி பகர்கின்றான். என்னசெய்வேன்..." என்று பிரலாபித்தாள்.

பலராமனோ "யாரேனும் வந்து விடுவார்கள். நான் இனிப் போகிறேன்" என்று துரிதப் படுத்துகிறான். கமலாம்பாளுக்கோ கற்பை யிழப்பது உயிரை யிழப்பதினும் கஷ்டமாய்த் தோன்றுகிறது. ஆனால் கண்ணபிரான்மேல் வைத்த காதல் அதனினும் அதிகமாதலால் அவன் மடியட்டுமென்று விட்டுவிட மனம் வரவில்லை. கடைசியில்,

"ஓ என் காதலனே! என் கற்பையும் உயிரையும் உனக்காகச் சந்தோஷமாய்த் தத்தம் செய்கிறேன். என் வாழ்நாள் முடிவிற்கு வருவதாயினும் நீ க்ஷேமமாய் உயிரோடிருக்கிறாய் என்ற நம்பிக்கையால் நான் நிம்மதியாய்ப் பிராணனை யிழப்பேன்......" என்று வாய்விட்டுக் கூறும்போது, பலராமன் "சீக்கிரம் சத்தியம் செய்துவிடு" என்றான்.

கமலாம்பாள் "ஆம் என் காதலனை நீ மீட்டுவிட்டால் நான் சத்தியமாய்......" என்று கூறி, அப்புறம் கூற நாவெழாது தடுமாற்றமுற்று, மறுபடி மனதைத் தைரியப்படுத்திக்கொண்டு "ஆம், நீ என் காதலனைத் தப்பவைத்துவிட்டால்...." என்று கூறியதும், அடுத்த மொழி அவள் வாயினின்றும் வெளி வருவதற்குள் அறையின் கதவுகள் படீர் என்று திறக்கப்பட்டதும், கண்ணபிரான் ஒரு பாய்ச்சலாய்ப் பாய்ந்து "ஆ! என் காதலியே. இப்போதுதான் நீ என் உயிரினும் அரியகாதலி யென்றுணர்ந்தேன்" என்று கூறிக்கொண்டே தன்னைநோக்கி வந்த கமலாம்பாளை யாலிங்கனம் செய்து கொண்டான். (தொடரும்) **ஆரணி குப்புசாமி முதலியார்.**

" ஆனந்தபோதினி " பஞ்சாங்கம்

சித்தார்த்திஞு அற்பிசிமீ—சாலிவாகனம் 1841-கலியுகாதி 5020

பசலி 1328-29—கோல்லம் 1094-95 - ஹிஜரி-1338-

இங்கிலீஷ் 1919-ம்ஞு அக்டோபர்மீ—நவம்பர்மீ

அற்பிசிமீ	அக்டோபர் / 1919ஞு நவம்பர்	வாரம்	திதி.	நக்ஷத்திரம்.	யோகம்.	விசேஷங்கள்.
1	17	வெ	நவ-47-55	பூச-40-3	மர-60	மாதப்பிறப்பு
2	18	ச	தச-45-25	ஆயி-38-52	ம-39 அ	ஆயில்யத்தின்படி
3	19	ஞா	ஏ-43-59	மக-39-12	ம-60	....
4	20	தி	து-43-43	பூர-40-30	சித்த-60	கிரகபாதைநிவர்த்தி
5	21	செ	திர-44-49	உத்-43-1	அ-43 சி	கிழக்கே பிரயாணம்
6	22	பு	ச-45-38	அஸ்-46-47	ம-47 சி	கரிநாள்
7	23	வி	●-50-38	சித்-51-38	சி-51 அ	....
8	24	வெ	பிர-55-0	சுவா-57-18	சித்த-60	வடக்கே பிரயாணம்
9	25	ச	து-59-55	விசா-60-0	சித்த-60	கிழங்குகள் நட-தான்ய
10	26	ஞா	தி-60-0	விசா-3-25	மர-60	.... [மருக்க
11	27	தி	தி-5-10	அனு-9-52	சித்த-60	சீமந்தம், பும்சவனம்.
12	28	செ	ச-10-4	கேட்-16-0	சித்த-60	யந்திரம்செய்ய.
13	29	பு	ப-14-31	மூல-21-40	ம-22 அ	கணிதாரம்பம் செய்ய
14	30	வி	ஷ-17-58	பூரா-26-24	சித்த-60	கடன் விமோசனம்
15	31	வெ	சப்-20-23	உத்-30-3	சி-30 ம	கிரகப்பிரவேசம்
16	1	ச	அ-21-28	திரு-32-34	சித்த-60	தெற்கே பிரயாணம்
17	2	ஞா	நவ-21-19	அவி-33-34	ம-34 சி	ருதுசாந்தி
18	3	தி	தச-19-57	சத-33-32	சித்-33-ம	டோலாரோகணம்
19	4	செ	ஏ-17-28	பூர-32-25	ம-32 அ	மரணயோகம்
20	5	பு	து-13-53	உத்-30-18	அ-30 ம	கரிநாள்
21	6	வி	திர-9-[illegible]4	ரே-27-29	சி-27 அ	
22	7	வெ	○-54-28	அசு-24-3	அ-24 சி	
23	8	ச	பிர-53-18	பர-20-1[illegible]	சி-20 அ	
24	9	ஞா	து-47-19	கிரு-16-4	சித்த-60	
25	10	தி	தி-41-12	ரோ-11-59	அ-60	
26	11	செ	ச-36-5	மிரு-8-3	சி-அ-ம	
27	12	பு	ப-31-7	திரு-4-34	சித்த-60	
28	13	வி	ஷ-26-42	புன-1-31	அ-60	
29	14	வெ	சப்-23-11	ஆயி-58-1	மர-60	
30	15	ச	அ-20-44	மக-57-50	அ-58 சி	

		கே	
	அ-விரு-பு. 12-கன்-சு.		குரு
			செ-சு-ச
	ர-பு	ரா-ர-பு	

PRINTED AND PUBLISHED BY N. MUNISAWMI MUDALIAR AT THE
" ANANDA BODHINI " PRESS, 15, VENKATESA MAISTRY STREET, MADRAS.